REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஓகஸ்ட் 9 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 187 | Wednesday 09, August, 2023 | 20பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலையில் சடுதியான மாற்றம்

**24 கரட் பவுண் ரூ.1,68,000**



கொழும்பு, செட்டியார்தெரு நகை வர்த்தகர்களின் தரவுகளின் பிரகாரம், ஆபரண தங்கத்தின் விலை நேற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த சில நாட்களாகவே ஆபரண தங்கத்தின் விலை சவரண் 06

**பயணிகள் போக்குவரத்தில் விரைவில் மின்சார பஸ்கள்**

# பொதுப் போக்குவரத்து சேவையை சீரமைப்பதற்கு துரித நடவடிக்கை



**போக்குவரத்து அனுமதி வழங்கலில் GPS, E– ticketing வசதிக்கு முன்னுரிமை**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக 2048 இல், பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையில் மின்சார பஸ்களை இணைக்க எதிர்பார்ப்பதாகவும், இது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் சில மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. 06

**நம்பிக்கையில்லா பிரேரணை மீது விவாதம் நடத்த ஐ.ம.சக்தி தயக்கம்**

### ஆளுந்தரப்பு தயார் நிலையில்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் உடனடியாக விவாதம் நடத்துவதற்கு ஆளும் தரப்பு முயற்சித்த போதிலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பின்வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு நேற்று (08) சபாநாயகர் மஹிந்த யாப்பா 06

# பொருளாதாரத்தில் முன்னேற டிஜிட்டல் மயமாக்கல் அவசியம்

**தேவையான வசதிகளை செய்து கொடுக்க அரசு எப்போதும் தயார் என்றும் தெரிவிப்பு**



காலாவதியான பொருளாதார முறைகளை பயன்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதெனவும், இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான பொருளாதார முறைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் விரைவான அபிவிருத்தியை அடைய முடியுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக புதிய சட்டங்கள் கொண்டுவர வேண்டுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கைக்கான முக்கிய வர்த்தக வசதிகளை அறிமுகப்படுத்துதற்கு அடித்தளமிடும் நிகழ்வில் (Launch of Key Trade Facilitation Initiatives in Sri Lanka) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Trade Facilitation Initiatives in Sri Lanka இணையத்தளமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 06

**பணம் தூய்தாக்கல் தடை, பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்**

# தேசிய கொள்கை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

பணம் தூய்தாக்கலை தடைசெய்வதற்கும் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்குமான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தவும் அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் உள்ளடங்கியதான செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ள, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களமாக இயங்குகின்ற நிதிசார் உளவறிதல் பிரிவால் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படும்.

பணம் தூய்தாக்கல் தடை மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்புக்களை தடுப்பதற்காக சர்வதேச தரக்கட்டளைகளை தயாரிக்கின்ற சர்வதேச அரசாங்கங் களுக்கிடையிலான நிதிச்செயலாற்றுகை செயலணி, அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

2006ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ள, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களமாக இயங்குகின்ற நிதிசார் உளவறிதல் பிரிவால் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படும்.

இதற்கமைய இலங்கை , நிதிச்செயலாற்றுகை செயலணியின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்படுகின்றதா? என்பதை நிதிச் செயலாற்றுகை செயலணியின் பிராந்திய நிறுவனமான பணம் தூய்தாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் வலயக் குழுவால் மதிப்பிடப்படும். குறித்த குழுவால் மேற்கொள்ளப்படும் பரஸ்பர மதிப்பீடு 2025 மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்காக மிகச்சிறந்த முறையில் இலங்கையின் நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 2023 – 2028 பணம் தூய்தாக்கலை தடைசெய்வதற்கும் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்குமான 06

# தொல்லியல் ஆய்வுகள் இனங்களை ஒற்றுமைப்படுத்துவதாக இருக்க வேண்டும்

**எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமையக் கூடாது**



தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் அடையாளப்படுதல்களும் நாட்டில் வாழ்கின்ற சகல மக்களதும் கலாசார தொன்மைகள், வரலாறுகளை பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையக் கூடாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (07) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சர், இவ்வாறு தெரிவித்தார்.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் மூன்று பாரம்பரிய பிரதேசங்கள் தொல்லியல் திணைக்களத்துக்குரிய பகுதியாக அண்மையில் 06



**03** இவ்வருடத்தில் மட்டும் 93 மீனவர்கள் கைது

### தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க முயற்சி எடுங்கள்

**அதிகரித்துவரும் வெப்பநிலையால் பாதிப்பு**

# சிறுவர்களுக்கு இயற்கை நீர் ஆகாரங்களை வழங்கவும்

**Dr. தீபால் பெரேரா பெற்றோருக்கு அறிவுரை**



தற்போது அதிகரித்த வெப்பநிலையால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அதிகமான இயற்கை நீர் ஆகாரங்களை சிறுவர்களுக்கு வழங்குமாறு கொழும்பு ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட 06

# மின்சார உற்பத்தி, விவசாயத்துக்கு நீர்: மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது

**தேர்தலை இலக்காகக் கொண்டு ஒருபோதும் செயற்படோம்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



மின்சார உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் நீரைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில், எதிர்க் கட்சியின் விமர்சனங்களுக்கும் நாம் அஞ்சப் போவதில்லை. மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதியை தடையின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென எரிசக்தி, மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிரணியின் சுயாதீன உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே 06

# பாரிய வர்த்தகமாக மாறியுள்ள சட்ட ரீதியற்ற பட்டங்கள் வழங்கல்

### தடுத்து நிறுத்த விரைவில் சட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கௌரவ பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கும் ஜனாதிபதிக்கும் மட்டுமே உள்ளது. அவ்வாறு, வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இவ்வாறான விருதுகள் 06

# சச்சின் டெண்டுல்கரினால் மாணவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி

**சப்ரகமுவ மாணவர்களுக்கு கிடைத்த அதிர்ஷ்டம்**



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் 'மாஸ்டர் பிளாஸ்டர்' சச்சின் டெண்டுல்கர் யுனிசெப் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தில் குறைந்த வசதியுடைய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் இவரது விஜயம் அமைந்திருந்தது.

கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட கல்வி வலயத்திலுள்ள, பல்லேகணுகல கனிஷ்ட வித்தியாலயத்தில் பயிற்சி நிகழ்வு (07) 06

# கந்தானை இரசாயன உற்பத்தி தொழிற்சாலையில் தீவிபத்து

**ஒருவர் பலி. 102 மாணவர்கள் ஆஸ்பத்திரியில்**



கந்தானை பழைய வீதியிலுள்ள இரசாயன தொழிற்சாலையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இத்தீ விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தீயை கட்டுப்படுத்த இரு தீயணைப்பு 06

**நிலுவைத் தொகை இருப்பின் செலுத்துவதற்கு உடன் தயார்**

### மின்சார சபை அறிவிக்கட்டும்



மின்சார நிலுவை தொகை ஏதும் இருப்பதாக மின்சார சபை அறிவித்தால், அதை செலுத்த தயாரென்று நாமல் ராஜபக்ஷ எம்.பி அறிவித்துள்ளதாக பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற 06



**03** யாழ். சிங்களவர்களுக்கு பிரச்சினை எம்பிக்களோ கொழும்பில் சுகபோகம்

UN கிளை அலுவலகத்தில் சிங்கள ராவய முறைப்பாடு

**நாட்டில் நிலவும் கடும் வெப்பம்**

# மலையக நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைவு



நாட்டில் கடந்த சில நாட்களாக மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம் நிலவுவதால் அப்பகுதியிலுள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டங்களும் வெகுவாக குறைந்துள்ளன.

குறிப்பாக மவுசாக்கல, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. 06

**டுபாயில் மறைந்து இயங்கும் பாதாளக் குழு உறுப்பினர்கள்**

### கைது செய்ய அரசு விசேட திட்டம் வகுப்பு

டுபாயிலிருந்தவாறு மறைந்து செயற்படும் பாதாளக் குழு உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு அரசாங்கம் விசேட வேலைத்திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம், கப்பம் 06

**நாட்டில் சுமார் 40,000 போலி வைத்தியர்கள்**

### GMOA சங்கம் குற்றச்சாட்டு

நாடு முழுவதும், 40,000க்கும் அதிகமான போலி வைத்தியர்கள் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. 06



**03** முல்லை நாயாறு கடற்பகுதியில்

### இந்திய மீனவர் 10 பேர் கைது

# நகர்வலம்



### பெருமளவு கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஆராய்வு

# அடுத்த வாரம் 38 ரூபா வரை முட்டையின் விலை குறையும்

### சபையில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்வரும் வாரங்களில் 38 ரூபாவுக்கு முட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் (08) தெரிவித்தார்.

நாட்டுக்கு தினமும் தேவைப்படும் முட்டைகளில் 35 வீத குறைபாடு காணப்படுவதாலே வெளிநாடுகளில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், ஜகத் குமார எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

முட்டை இறக்குமதி அரசாங்கத்தினால் தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே. நாட்டிற்கு தினந்தோறும் தேவைப்படும் முட்டைகளில் தேசிய உற்பத்தியிலிருந்து கொள்வனவு செய்த போதும் மூன்று லட்சம் முட்டைகளுக்கான குறைபாடு காணப்படுகின்றது.



அந்த வகையில் நூற்றுக்கு முப்பது வீதமான குறைபாடு காணப்படுகிறது.

நூற்றுக்கு ஐந்து வீத அல்லது பத்து வீத குறைபாடு என்றால் எம்மால் அதை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். எனினும் 30 வீதம் என்பது இப்போதைக்கு எம்மால் நிவர்த்தி செய்து கொள்ள முடியாத காரணத்தினாலேயே நாம் வெளிநாடுகளிலிருந்து முட்டையை இறக்குமதி செய்ய தீர்மானித்தோம்.

அதேபோன்று நாட்டுக்கு போதுமான அளவில் முட்டையை உற்பத்தி செய்வதற்கு எமக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது தொடர்பில் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய அமைச்சுக்களோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தினோம். எனினும் அடுத்த வருடம் நடுப்பகுதி வரை அவ்வாறு முழுமையான தேவையை நிவர்த்தி செய்ய முடியாது என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு பல காரணங்கள் உள்ளன.

நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான முட்டைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய உற்பத்தியாளர்கள் நான்கு பேரே உள்ளனர். அவர்களே பாரிய முட்டை உற்பத்தியாளர்கள். அவர்களே முட்டை வர்த்தகத்தில் பெரும் அழுத்தங்களை மேற்கொள்கின்றனர்.

நாம் தற்போது சதொச மற்றும் ஏனைய வர்த்தக சந்தைகளில் 35 ரூபாவுக்கு முட்டையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது தேசிய உற்பத்தியாளர்களும் சிறு விலைக் குறைப்பை கடந்த வாரங்களில் மேற்கொண்டனர். 65 ரூபா வரை சென்ற முட்டையின் விலை 50 ரூபா வரை குறைக்கப்பட்டது.

சில இடங்களில் 44 ரூபாவுக்கும் முட்டை விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு வாரமளவில் 38 ரூபா வரை அதன் சில்லறை விலை குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாள் கோழிக்குஞ்சு கடந்த காலங்களில் 300 ரூபாவுக்கே விற்கப்பட்டது. எனினும் தற்போது அது 950 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதன் மூலம் இது எந்தளவு கேள்வி உள்ள ஒரு வர்த்தகமாக மாறியுள்ளது என்பதை குறிப்பிடத் தேவையில்லை. அதனால் சிறு அளவில் முட்டை உற்பத்தி செய்வோர் கோழிக்குஞ்சுகளை பெற்றுக் கொள்ள முடியாத வகையில் பாரிய உற்பத்தியாளர்கள் அதனைப் பெற்று வருகின்றனர். அதன் மூலம் முட்டை ஏகாதிபத்தியத்தை முன்னெடுப்பதே அவர்களின் செயற்பாடாக உள்ளது.

அதனால் ஜனாதிபதி, விவசாய அமைச்சு, வர்த்தக அமைச்சு ஆகியவை இணைந்து நாம் பேச்சுவார்த்தை நடத்தி குஞ்சுகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.அதன்மூலமே உற்பத்திகளை அதிகரிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பேருவளை பாஸியதுந் நஸ்ரியாவில்

## இன்று மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் விழா நிகழ்வு

பேருவளை மருதானை பாஸியதுந் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று 09ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி எம். எம். மஸ்னவியா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக களுத்துறை வலய கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (பாடசாலை நிர்வாகம்) திருமதி பி.வி.எம். டபிள்யூ. குமாரசிறி கலந்து கொள்வார்.

கௌரவ அதிதிகளாக களுத்துறை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (தமிழ் மொழி) எஸ். ஜெயகுமார், பேருவளை கோட்ட கல்விப் பணிப்பாளர் டபிள்யு.ஏ.ஜே.யூ. சோமரட்ன, களுத்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ் மொழி) எம்.ரீ.எம். இல்யாஸ் மற்றும் சிறப்பு அதிதியாக டொக்டர் ஜனாபா ரிஸ்கா ரிம்ஸான் (எம்.பி.பி.எஸ்.) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பல கல்விமான்களை உருவாக்கிய இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வெகுவிமர்சையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முன்னெடுத்து வருவதாகவும் அதன் முன்னோடியாக கனிஷ்ட மாணவிகளை பயிற்றுவிக்கும் நோக்கோடு இன்றைய தினம் மாணவத் தலைவிகளாக நியமிக்கப்படுவதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## வெலிகமவில் இன்று உதைபந்தாட்ட போட்டி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம அறபா தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணிக்கும் மாத்தறை றுகுணு பல்கலைக்கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி இன்று (9) பிற்பகல் 3.30 மணியளவில் வெலிகம அறபா தேசிய பாடசாலை பதியுத்தீன் மஹ்மூத் விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளதென கல்லூரி அதிபர் எம். டி.எம். முதஹ்ஹர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அறபா தேசிய பாடசாலை அணி பல பாடசாலைகளோடு உதைபந்தாட்ட போட்டியில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டி வருவதோடு கடந்த வாரம் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களோடும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை - இந்திய ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ்

# தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம் நடைமுறையில்

### திட்டத்திற்கு முதற்கட்டமாக இந்தியா 450 மில்லியன் ரூபா கையளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் அனைத்துத் துறைகளையும் டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் அடித்தளமாக தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை இந்திய திட்ட கண்காணிப்புக் குழு தீர்மானித்துள்ளது.

அதற்கு முதற்கட்டமாக இத்திட்டத்திற்கான மொத்த தொகையில் 15% த்தை வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதுடன் அதற்கிணங்க 450 மில்லியன் இந்திய ரூபா பெறுமதியான காசோலை இந்திய உயர்ஸ்தானிகரால் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனகஹேரத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இராஜாங்க அமைச்சர் கனகஹேரத், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதன்மை செயலாளர் எம். எல்டோல் மெத்தியு, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எம்.டி. குணவர்தன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்‌ஷன ஜயவர்தன ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குவதுடன் அவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் கூடி இத்திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கேள்விப் பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் உரிய கால வரையறைக்கிணங்க அதனை பரிசீலணை செய்து திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வாரம் ஒருமுறை கூடி திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விசேட பணிப்புரைகளையும் வழங்கியுள்ளார்.

## தமிழக முகாம்களில் வசிக்கும் இலங்கையருக்கு பிறப்புச் சான்றிதழ்



தமிழகத்தில் 26 புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இலங்கையின் துணை உயர் ஸ்தானிகரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்றை அண்மையில் நடாத்தியது. இதன்போது பிறப்புச் சான்றிதழ் இல்லாத 129பேருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு 150 குடியுரிமைச் சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன.

## அநுராதபுரம் வை.எம். எம்.ஏ கிளை புதிய நிர்வாகிகள் தெரிவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் அழுத்கம வை.எம். எம். ஏ கிளையின் பத்தாவது வருடாந்த பொதுக்கூட்டம் மாவட்ட பணிப்பாளர் ஜே. ஜுனைதீன் (ஓய்வுபெற்ற அதிபர் சமாதான நீதவான்) தலைமையில் அழுத்கம ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது பின்வருவோர் அழுத்கம வை.எம்.எம்.ஏ கிளையின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் : ஜே. றஹ்மதுள்ளா, செயலாளர் : ஏ.றஜால், பொருளாளர்: எஸ்.ஹிதாயதுள்ளா, உப தலைவர்களாக : ஜே.இப்றாஹிம், ஏ.ஆர். நூஹுர், உப செயலாளர்களாக : ஐ. ஹலீம்தீன் (லாபிர்) , எம்.மிஹ்லார்

கணக்கு பரிசோதகர் : பீ. இல்முதீன் (நபீர்), அங்கத்தவர்களாக : காலிதீன் றிஸ்வி, சாஹுல் ஹமீட், ஜுனைதீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



தஞ்சாவூரில் தமிழர்களின் பாரம்பரிய தற்காப்பு சண்டை பயிற்சிகள் அழிந்து வரும் இக்காலகட்டத்தில் தமிழ்நாடு அஷ்டடோ அகடா கழகம் தமிழகம் முழுக்க எல்லா கிராமங்களிலும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதன் இரண்டாவது ஆண்டு மாநில போட்டியினை அதிதிகள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.



பேருவளை 'சீனன்கோட்டை பௌண்டேஷன்' ஏற்பாட்டில் நடைபெற்ற தையல் பயிற்சி கண்காட்சி மற்றும் தையல் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (05) சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பௌண்டேஷன் தலைவர் பஸால் ஹாஜி தலைமையில் நடைபெற்ற விழாவில் அதிதிகளாக கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷாமிலா தாவூத், முஸ்லிம் சேவை பிரதிப் பணிப்பாளர் பாத்திமா றினூசியா ஆகியோர் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

## கடாண்டுகம ஜாயாவில் உ/த பிரிவு ஆரம்பம்

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

கெகிராவ கல்வி வலயத்திலுள்ள அ/கடாண்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் 2023ஆம் ஆண்டிற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தொழிட்நுட்ப பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.நௌபர் தெரிவித்தார்.

கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இப்பாடங்களுக்கு நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்களை வார இறுதி நாட்களில் வரவழைத்து மேலதிகமான கற்பித்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் இதற்காக பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள் கூட்டாக செயற்பட்டு வருவதாகவும் பாடசாலையின் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## அரச சேவையாளர்களுக்கு தமிழ் மொழி கற்கை நெறி

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் அரச தாதிமார் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச சேவையாளர்களுக்கான தமிழ் மொழி கற்கை நெறியின் நாலாவது குழுவினரின் மொழிப் பயிற்சி அண்மையில் நிறைவுபெற்றது. இந்த பயிற்சி நெறி பூர்த்தி தொடர்பான இறுதிநாள் தினம் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



## பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ கும்புக்வெவ பகுதியில் இராணுவ சிப்பாய் ஒருவரை தாக்கி அவரது மனைவி மற்றும் மகனை காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கைது செய்துள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான இராணுவ சிப்பாய் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுடனான முரண்பாடே தாக்குதலுக்கான காரணமாகும் என பொலிஸார் தெரிவிப்பதுடன் இவர்கள் இருவரும் அயலவர்கள் எனவும் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 9 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN




தொழுகை நேரம்

சுபஹ் - 04.45
லுஹர் - 12.18
அஸர் - 03.38
மஃரிப் - 06.29
இஷா - 07.43

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஆடி 24

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## சவால்களுக்கு முகம் கொடுக்காது தப்பியோடியோர்

# நாட்டின் பொருளாதாரம் பற்றி பேச எந்த உரிமையும் கிடையாது



(லோரன்ஸ் செல்வநாயகம்)

சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல், பொறுப்பின்றி தப்பியோடிய தரப்பினர் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் பேசுவதற்கு எந்த உரிமையும் கிடையாதென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த கால ஆட்சியில் நடந்ததை விடுத்து தற்போதைய ஆட்சியில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், அதனை எடுத்துக் கூறுமாறும் இது தொடர்பில் கவனம் செலுத்த நாம் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

திருடர்கள் தொடர்பில் பேசக்கூடிய உரிமை எதிர்க்கட்சியினருக்கு உள்ளதா ? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.

எனினும், இப்பிரச்சினை தற்போது எழுப்பப்பட்டுள்ள நிலையில், கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு நாட்டிலிருந்த நிலைமை மற்றும் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சி எம்பிக்களுக்கு பெரும் ஆதங்கம் உள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

06



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட கலாநிதி சுனில் ஜயந்த நவரத்னவுக்கு, நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரிந்திர காரியவசம் வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர், முகாமையாளர் மற்றும் நிறுவன செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் சபாநாயகரினால் நேற்று சான்றுரைப்படுத்தப்பட்டது



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (08) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இச்சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச

06

## யாழிலுள்ள சிங்களவர்களுக்கு பிரச்சினைகள் யாழ். எம்பிக்களோ கொழும்பில் சுகபோகம்

### UN கிளை அலுவலகத்தில் சிங்கள ராவய முறைப்பாடு



யாழ். மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பதாக சிங்கள ராவய அமைப்பு உள்ளிட்ட சிங்கள அமைப்புக்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளன.

யாழில் உள்ள சிங்கள மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து, கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அலுவலகத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிங்கள ராவய அமைப்பு உள்ளிட்ட

06

## முல்லை நாயாறு கடற்பகுதியில் இந்திய மீனவர் 10 பேர் கைது



(ஓமந்தை விஷேட நிருபர்)

நாயாறு கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் பத்துப் பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.இச்சம்பவம். குறித்து மேலும். தெரியவருகையில் முல்லைத்தீவு

06

## தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க முயற்சி எடுங்கள்

### மத்திய அரசுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களை உடனடியாக மீட்டு அழைத்துவர நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

## சிறுவர்களுக்கான இன்சுலின் கையிருப்பில்

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுவர்களுக்கு தேவையான இன்சுலின் போதியளவு கையிருப்பில் உள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (08) காலை ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட அவர், வைத்தியசாலைகளில் இன்சுலின் இல்லையென வெளியான தகவல் பொய்யானது எனவும் கூறினார்.

எங்கள் வைத்தியசாலையில் தேவையான யளவு இன்சுலின் உள்ளது. சிகிச்சைகளுக்கு வரும் சிறுவர்களுக்கு போதுமான இன்சுலின் வழங்கும் திறனும் இங்கு உள்ளது.

நாட்டிலுள்ள எந்த ஒரு வைத்தியசாலைக்கும் இன்சுலின் தேவை இருந்தால், அதை வழங்கும் திறன் எங்களிடம் உள்ளது. எனவே, குழந்தைக்கு இன்சுலின் கொடுக்க விரும்பினால் தயக்கமின்றி வைத்தியசாலைக்கு செல்லு மாறும் அவர் தெரிவித்தார்.

### லேடிரிஜ்வே சிறுநீரக சிகிச்சை சம்பவம்

## ஐந்து அம்சங்களை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு அஸாத்சாலி கடிதம்



பொரளை லேடி ரிஜ்வே வைத்திய சாலையில் நடந்த முறைகேடான சிறுநீரக அறுவைச் சிகிச்சை குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடாத்தப்பட

வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.,ஐந்து விடயங்களை வலியுறுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்கு அவர், கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது;

முஹம்மட் ஹம்தி எனும் குழந்தைக்கு லேடிரிஜ்வே வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்போது இடம்பெற்ற கொடூரத்தை தங்களது மேலான

06

## அரசாங்க அறிவித்தல்

### இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

### ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை – 2020/2021 (2023) பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிப் பரீட்சை – 2022(2023)

மேற்படி பரீட்சையை 2023.08.14 ஆம் திகதியிலிருந்து 2023.08.19 ஆம் திகதி வரை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் ஆசிரியர் கலாசாலை அதிபர்களுக்கும், பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் www.doenets.lk எனும் இணையத்தளத்தினூடாக பிரவேசித்து அனுமதி அட்டைகளை தரவிறக்கம் செய்து கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறியத்தருகின்றேன்.

இது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி எண்களூடாக தேவையான விவரங்களை பெற்றுக் கொள்ளும்படி மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விசாரணை :-**

| | | |
|---|---|---|
| தொலைபேசி எண் | : | 011-2785413, 011-2784208, 011-2784537, 011-2786616 |
| துரித அழைப்பு எண் | : | 1911 |
| தொலைநகல் எண் | : | 011-2784422 |
| அஞ்சல் முகவரி | : | பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பும் பெறுபேறும், த.பெ.இல. 1503, கொழும்பு |

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**6/33/GV/2023**
**இலங்கை பரீட்சைகள் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2023.08.08**




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று

*மதியாதவரின் பின் சென்று ஒருவன் உயிர்வாழ்வதை விட, அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நல்லது.*

# மின்சாரக் கட்டணத் திருத்தத்தில் பரவும் ஆதாரமற்ற வதந்திகள்

மின்கட்டணம் அதிகரிக்கப்படும் என்று சில சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன, இது மக்கள் மத்தியில் பரபரப்பையும் ஏற்படுத்தியது. மின்கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் கடந்த (2023) ஜூலை மாதம்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதற்கிடையில் மின்கட்டணத்தில் மற்றொரு திருத்தமா என மக்கள் ஆச்சரியமடைந்தனர். அவ்வாறான ஒரு திருத்தம் இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை என்பதுதான் பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தது.

ஏனெனில் மின்கட்டணத் திருத்தமொன்று நடைமுறைக்கு வந்து இப்போது ஒரு மாதம்தான் நிறைவடைந்திருக்கின்றது. அதற்கிடையில் மற்றொரு திருத்தம் என்பது சாத்தியமற்ற விடயம். இந்நாட்டின் மின்கட்டணத் திருத்த வரலாற்றில் அண்மைக் காலத்தில் அவ்வாறு ஒருபோதும் இடம்பெறவில்லை.

ஆனாலும் 'மின்சார சபைக்கு தொடராக ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் மின்கட்டணத்தில் உடனடியாக அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்' என்று இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கூறியுள்ளது.

அதேநேரம் நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்து வருகின்றது. இதன் விளைவாக இடையூறுகள் இன்றி தொடராக மின்சாரத்தை மக்களுக்கு வழங்கவென அதற்கான உற்பத்தி செலவு அதிகரிக்கப்பட முடியும்.

இந்த இரண்டு விடயங்களும் மற்றொரு மின்கட்டணத் திருத்தத்திற்கான சாத்தியங்களை வெளிப்படுத்தி நின்றன. அதனால் மற்றொரு மின்கட்டணத் திருத்தம் இடம்பெறலாம் என நம்பிய பாவனையாளர்களும் இருக்கவே செய்கின்றனர்.

ஆனால் மக்கள் கடந்த வருடத்தின் முற்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தனர். அதன் விளைவான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் மக்கள் முகம்கொடுத்தனர். நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி அந்த நெருக்கடிகளுக்கு முன்பாக பெரும்பாலான மக்கள் பொறுமை காத்தனர். அதன் பிரதிபலன்களை அவர்கள் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் மின்கட்டணத்தில் மற்றொரு திருத்தத்தை உடனடியாக மேற்கொள்வது மக்களைப் பாதிக்கக் கூடியதாகவே இருக்கும். இதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் அறியாதவர்களும் அல்லர்.

இவ்விடயத்தில் கவனம் செலுத்திய மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, 'வருடா வருடம் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மாத்திரமே மின்கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும். அதுவே அரசாங்கத்தின் கொள்கை. இதைவிடுத்து சமூக வலைத்தளங்கள் குறிப்பிடுவது போன்று மின்கட்டணங்களில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பின் ஊடாக மற்றொரு மின்கட்டணத் திருத்தம் உடனடியாக இல்லை என்பது உறுதியாகியுள்ளது. அத்தோடு மற்றொரு மின்கட்டணம் திருத்தம் உடனடியாக இடம்பெறவிருப்பதாகக் குறிப்பிட்டு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியையும் அமைச்சரின் இந்த அறிவிப்பு செல்லாக் காசாக்கியுள்ளது.

இம்முயற்சியின் ஊடாக அற்ப அரசியல் இலாபம் அடைந்து கொள்ளலாம் என மனப்பால் குடித்த ஒரு சில தரப்பினரின் முகங்களில் இந்த அறிவிப்பு கரிபூசியுள்ளது. ஆனாலும் அமைச்சரின் இவ்வறிவிப்பு மின்பாவனையாளர்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய ஆறுதலாக அமைந்துள்ளது. அதன் காரணத்தினால் இவ்வறிவிப்பைப் பலரும் வரவேற்றுள்ளனர்.

அதேநேரம், நாட்டில் வரட்சியான காலநிலை நிலவுகின்ற போதிலும் துண்டிப்பின்றி மின்சாரத்தைத் தொடராக வழங்குவதற்கான ஏற்பாடுகளை மின்சாரசபை மேற்கொண்டு வருவதையும் அமைச்சர் குறிப்பிடத் தவறவில்லை.

இதன்படி உடனடி மின்கட்டணத் திருத்ததிற்கும் வரட்சியை அடிப்படையாகக் கொண்டு மின்துண்டிப்புக்கும் வாய்ப்பில்லை என்பது உறுதியாகியுள்ளது. இதன் ஊடாக மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

அதனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்துள்ள நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். நாட்டை உண்மையாகவே நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் பொறுப்பு இது. கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணியும் கூட. அந்த ஆதரவும் ஒத்துழைப்பும் நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு பக்கதுணையாக அமையுமென உறுதிப்படக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பிணக்குகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்து வைக்கும் மத்தியஸ்த சபைகள்

## அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 43 பேர் உறுப்பினர்களாக நியமனம்

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இடம்பெறுகின்ற பல் வேறான பிணக்குகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்து வைத்து மாற்றுத் தீர்வுப் பொறிமுறையினை பரவலாக்கும் வகையில் நீதி அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்டுள்ள அட்டாளைச்சேனை மத்தியஸ்தசபை அங்கத்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நியமனம் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர நீர்ப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் கௌரவ அதிதியாகவும், பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில், சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ்.எம்.ஏ.கபூர், எஸ்.எல்.ஏ.றசீட், ஐ.எல்.ஏ. கபூர், அம்பாறை_ மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபை பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.எம்.ஆஷாத் போன்ற முக்கியஸ்தர்கள் விஷேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மூன்று வருடங்கள் செயற்படும் வண்ணம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஆலம்குளம், சம்புநகர் ஆகிய பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியஸ்த சபை தவிசாளர் ஐ.எல்.எம். ஹாசீம் தலைமையிலான 43 உறுப்பினர்கள் இதன்போது நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்காக துறைசார் முக்கியஸ்தர்கள் அங்கத்தவர்களாக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக உளநல உதவியாளர்கள், பெண்கள்_சிறுவர்கள் பிரிவில் பணியாற்றும் முன்னிலை உத்தியோகத்தர்கள், மார்க்க அறிஞர்கள், மதநிறுவனங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் நேரடித் தொடர்பாளர்கள் மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் வகையில் நீதி அமைச்சின் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டபோது இதற்கென, 217 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் 168 பேருக்கு நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது. இவர்களில் 68 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள் 43 பேர் எழுத்து மூலப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கு விஷேட பயிற்கள் துறைசார் அதிகாரிகளால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் உரையாற்றும் போது, "இலங்கை எங்கும ஏற்படும் பிணக்குகளில் 60 சதவீதமான பிணக்குகள் மத்தியஸ்த சபைகள் மூலம் தீர்க்கப்படுகின்றன. மத்தியஸ்த சபைகளில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்கள் பிணக்குகள் என்று வருபவர்கள் மத்தியில் பாரபட்சம் காட்டாமல் நீதியின் பக்கம் நின்று செயற்பட வேண்டும். அப்போது தான் இவர்களிடம் சென்றால் நிச்சயம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் எம்மை நோக்கி வருவர். சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பிணக்குகளை கலந்துரையாடல் மூலம் நீக்கி நல்லொழுக்கமுள்ள மக்கள் சமுதாயத்தினை கட்டியெழுப்பும் வகையில் மத்தியஸ்தசபை பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்" என்றார்.





எம்.ஏ. றமீஸ்...
(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

# ராகுல் காந்தியை திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்த நடிகை சோப்ரா!

நடிகையும், மொடல் அழகியுமான ஷெர்லின் சோப்ரா, காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தியை திருமணம் செய்வது தொடர்பான கேள்விக்கு 'ஓகே' என்று பதிலளித்த வீடியோ தற்போது இணையதளத்தில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது.

ராகுல் காந்திக்கு தற்போது 53 வயது ஆகிறது. அவர் திருமணம் செய்து கொள்ளாமல் உள்ளார். இதுதொடர்பாக ராகுல் காந்தியின் தாயார் சோனியா காந்தி மற்றும் தங்கை பிரியங்கா காந்தியிடம் அடிக்கடி கேள்விகள் கேட்கப்படுகின்றன. சமீபத்தில் கூட சோனியா காந்தி இல்லத்தில் ஹரியானா பெண் விவசாயிகளுக்கு ராகுல் காந்தி விருந்து வழங்கினார்.

அப்போதும் சோனியா காந்தியிடம் பெண் ஒருவர் ராகுல் காந்தியின் திருமணம் பற்றி கேள்வி கேட்டார். அதற்கு அவர் "நீங்களே பெண் பாருங்கள்" எனத் தெரிவித்த வீடியோ வெளியாகி வேகமாக பரவியது.

இத்தகைய சூழலில்தான் ஷெர்லின் சோப்ரா, ராகுல் காந்தியை திருமணம் செய்ய ஒரு நிபந்தனையுடன் சம்மதம் சொல்லும் வீடியோ வெளியாகி உள்ளது. அதாவது ஷெர்லின் சோப்ரா தனது ரசிகர்களுடன் 'செல்பி' எடுக்க போஸ் கொடுத்த போது அவரிடம், "ராகுல் காந்தியை திருமணம் செய்வீர்களா?" என்ற கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு அவர், "ஏன் இல்லை? ராகுல் காந்தியை திருமணம் செய்து கொள்வேன். ஆனால் ஒரு நிபந்தனை! திருமணத்துக்குப் பிறகு எனது குடும்பப் பெயரை என் பெயருக்குப் பின்னால் பயன்படுத்துவேன்" எனத் தெரிவித்துள்ளார்.



இந்த வீடியோ தான் தற்போது இணையதளத்தில் வேகமாக பரவி வருகிறது. ராகுல் காந்தியை திருமணம் செய்ய தயாராக இருக்கும் ஷெர்லின் சோப்ரா நடிகையாகவும், மொடல் அழகியாகவும் உள்ளார். இவர் தெலங்கானாவின் ஹைதராபாத்தில் பிறந்தார். இவரது தந்தை கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். தாய் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை டொக்டராக உள்ளார்.

ஷெர்லின் சோப்ரா கடந்த 1999 இல் 'மிஸ் ஆந்திரா' பட்டத்தை வென்றார். அதன்பிறகு 2002 இல் திரைத்துறையில் கால்பதித்தார். தமிழ், தெலுங்கு திரைப்படங்களில் நடித்துள்ளார். 2002 இல் தமிழில் இயக்குனர் பிரகதீஷ் இயக்கத்தில் வெளியான 'யூனிவர்சிட்டி' திரைப்படத்தில் ஷெர்லின் சோப்ரா, நடிகர் ஜீவனுடன் நடித்திருந்தார்.

மேலும் ஷெர்லின் சோப்ரா 'பிளேபாய்' பத்திரிகையில் ஆடையின்றி போஸ் கொடுத்த முதல் நபர் என்ற பெயரைப் பெற்றார். இந்தப் புகைப்படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இவர் பிக்பொஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார. மேலும் இசை சார்ந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்று வருகிறார்.

## அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் தேவைகள்;

# பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரக குழுவிடம் பைசல் காசிம் எம்.பி எடுத்துரைப்பு

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக் கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் 07 ஆம் திகதி அம்பாறை மொண்டி ஹோட்டலில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது அம்பாறை மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகள் சம்பந்தமாக பைசல் காசிம் எம்.பி விளக்கிக் கூறினார். பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகளுக்கான முதலாவது செயலாளர் ஹென்றி டொனாடி, துணை நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் மிஸ்லி நிசார் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

அம்பாறை மாவட்டதில் வாழ்கின்ற முஸ்லிம்களில் பெருமளவானோர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வதாக எடுத்துக் கூறிய பைசல் காசிம் எம்.பி, அவர்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பட்டியலையும் முன்வைத்திருந்தார். அங்கு நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலின் இறுதியில் பிரித்தானிய மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் நட்புறவினை பிரதிபலிக்கும் வகையில் உயர்ஸ்தானிகராலயத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றி உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் விபரித்தனர்.



மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குத் தீர்வு காணுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல் ஆகிய வேலைத்திட்டங்களை நாடு தழுவிய வகையில் மேற்கொள்ளுமாறும், இலங்கை தீவுக்குள் தீர்க்கப்படாத நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முன்வருவதுடன் அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

எம்.எப். நவாஸ்...
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# ரஷ்ய-உக்ரேன் சமாதானப் பேச்சுவார்த்தைக்காக 42 நாடுகளை ஒன்றிணைத்து சவூதி ஆரம்பித்த முயற்சி

அமெரிக்கா, சீனா, இந்தியா, உக்ரேன் உள்ளிட்ட 42 நாடுகளின் உயர் அதிகாரிகளை சவூதி அரேபியா, ஜித்தாவில் சந்தித்துள்ளது. சமாதானத் தீர்வுக்கான சர்வதேச ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே கடந்த சனிக்கிழமை சவூதி அரேபியா இம்முயற்சியை ஆரம்பித்தது.

உக்ரேன் மற்றும் மேற்கத்திய ஆதரவாளர்களும் ரஷ்ய_ உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகள் சர்வதேச ஆதரவைத் திரட்டும் ஒரு முயற்சியாக அமையுமென்பது உக்ரேனின் நம்பிக்கையாகும். உக்ரேன்_ ரஷ்ய மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதில் வல்லரசு நாடுகள் நடுநிலை வகிக்கின்றன. சவூதி மேற்கொண்ட முயற்சிகளையடுத்து கடந்த சனிக்கிழமை ஜித்தாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் அந்த நாடுகள் இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போரின் மூலம் உலகளாவிய ரீதியில் ஏற்படும் தாக்கத்தை மையமாகக் கொண்டு ஒரு பணிக்குழுவை உருவாக்க ஜித்தா பேச்சுவார்த்தையில் உடன்பாடு காணப்பட்டது. கடந்த ஜுன் மாதம் டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்த ஆரம்பப் பேச்சுவார்த்தைகளுக்கு மேற்கத்திய நாடுகளின் ஆதரவு பெருமளவு கிட்டவில்லை. அப்பேச்சுவார்த்தையில் பல நாடுகள் கலந்து கொள்ளவுமில்லை. ஆனால் சவூதி அரேபியா மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து இந்தியா, சீனா போன்ற நாடுகள் அடுத்தடுத்த வாரங்களில் இப்பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு இணக்கம் தெரிவித்தன.

பேச்சுவார்த்தையின் போது போர் நிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான 12 அம்சத் திட்டத்தை சீனா முன்வைத்தது. ரியாத்தும் பெய்ஜிங்கும் நெருங்கிய உறவைப் பேணுகின்றன. கூட்டத்தை நடத்த சவூதி அரேபியாவை தேர்ந்தெடுப்பதன் மூலம் சீனாவைப் பங்கேற்க வைக்க முடியும் என்று மேற்கத்திய இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். சவூதி அரேபியா உக்ரேன் மீதான இராஜதந்திரத்தில் ஒரு பெரிய பங்கை வகிக்க முயற்சிக்கிறது.



"சவூதி ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் இராஜதந்திர ஈடுபாட்டுக்கும் நிறைய வரவேற்புகளும் பாராட்டுகளும் கிடைத்துள்ளன" என்று அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. ஜித்தாவில், உக்ரேன் மற்றும் முக்கிய நடுநிலை நாடுகள் ஒருமித்த கருத்துக்கு அதிக ஆர்வம் காட்டுகின்றன. ஒரு மூத்த ஐரோப்பிய அதிகாரி கூறும்போது, உக்ரேன் தனது அமைதித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அழுத்தம் கொடுக்கவில்லை என்றும், கியேவ் (உக்ரேனின் தலைநகர்)அதை கைவிட வேண்டும் என்று மற்ற நாடுகள் வலியுறுத்தவுமில்லை என்றும் கூறினார்.

உக்ரேன் அமைதித் திட்டத்தில் எழுப்பப்பட்ட குறிப்பிட்ட விவகாரங்களில் ஒன்றாக பணிக்குழுக்களின் தொகுப்பை முன்மொழிய சவூதி அரேபியா திட்டமிட்டுள்ளது. அவற்றில் போரின் உலகளாவிய தாக்கம், அதன் அணுசக்தி பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தாக்கங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவை அடங்கும். சவூதி அரேபியாவின் இம்முயற்சிகள் தொடர்ந்தும் வெற்றியளிக்கும் பட்சத்தில் உலக சமாதானத்துக்கும் சுபிட்சத்துக்கும் மிகப்பெரும் எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் சந்தேகமில்ல.



அஷ்ஷெய்க்
பௌதுல் அலவி...
(மதனி), செயலாளர் தாருள் இமான் நிறுவனம்

# தினகரன் Business

## 2023 முதல் அரையாண்டில்

# யூனியன் வங்கி உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளது

நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில், யூனியன் வங்கி அதன் பிரதான வங்கி வினைத்திறனில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்ததுடன், ஒட்டுமொத்த வருமானமாக ரூ. 11,729 மில்லியனை பதிவு செய்திருந்தது. ஒப்பீட்டளவில் இந்தப் பெறுமதி 58% அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.



வங்கியின் வருமானத்தில் அதிகரிப்பு பதிவாகியிருந்தமையில், தேறிய வட்டி வருமானம் (NII) அதிகரித்திருந்தமை பங்களிப்புச் செய்திருந்தது. இப்பெறுமதி 24% இனால் அதிகரித்து ரூ. 3,118 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், கடன் பிரிவு மற்றும் திறைசேரி சொத்துக்களிலிருந்து கிடைத்திருந்த மேம்பட்ட வருமதிகள் பங்களிப்புச் செலுத்தியிருந்தன. திறைசேரியில் GSEC மூலதன வருமதிகள் மற்றும் அந்நியச் செலாவணி இலாபகரத்தன்மை ஆகியவற்றிடமிருந்து பெருமளவு பங்களிப்புகள் கிடைத்திருந்தன. வங்கி எவ்விதமான சர்வதேச இறையாண்மை முறிகளை (ISBs) கொண்டிருக்கவில்லை என்பதுடன், வங்கியிடம் காணப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் (SLDB's) முதிர்வடைந்திருந்ததுடன், வருமதிக்காக காத்திருக்கின்றன. தேறிய வட்டி எல்லைப் பெறுமதி (NIM) 82 புள்ளிகளால் அதிகரித்திருந்தது, உரிய காலப்பகுதியில் சொத்துக்கள் மீள்விலையிடல் மற்றும் வட்டிசார் செலவுகள் முறையாக நிர்வகிக்கப்பட்டிருந்தமை இதில் பங்களிப்புச் செய்திருந்தன.

தேசிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் 18% இனால் அதிகரித்திருந்தது. இதில் கடன் அட்டைகள், வெளிநாட்டு பண அனுப்புகைகள் மற்றும் வர்த்தக வியாபாரங்களின் அதிகரித்த செயற்பாடுகள் போன்றன பெருமளவில் பங்களிப்புச் செய்திருந்தன. ஒதுக்கங்களுக்கு முன்னரான வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 4,029 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 13% அதிகரிப்பாகும். ஒப்பீட்டு காலப்பகுதியில், வங்கியின் மதிப்பிறக்க கட்டணம் ரூ. 726 மில்லியனாக குறைந்திருந்தது. கடுமையான மீட்பு அறவீட்டு ஏற்பாடுகளினால் இந்தப் பெறுமதி பதிவாகியிருந்தது. கடுமையான செலவு நிர்வாக ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும், வங்கியின் மொத்த செயற்பாட்டு செலவுகள் 21% இனால் அதிகரித்து ரூ. 2,496 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், சம்பள அதிகரிப்புகள், மின்சாரம் சார்ந்த அதிகரிப்புகள் மற்றும் அந்நிய செலாவணி நட்டம் போன்றன பங்களிப்பு செய்திருந்தன.

## HNB இன் 800ஆவது ஸ்மார்ட் சுயசேவை வங்கி பாதுகாப்பு தலைமையக வளாகத்தில்






ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே அக்குரேகொடவில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்திற்குள் அமைந்துள்ள டிஜிட்டல் வங்கி வலயத்தில் பண மீள்சுழற்சி இயந்திரத்தை (Cash Recycle Machine CRM) HNB அண்மையில் திறந்து வைத்தது.

CRM ஆனது HNB இன் 800வது சுயசேவை இயந்திரமாக (Self Service Machine SSM) HNB இன் சேவை வழங்குவதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. இந்த மேம்பட்ட வசதி வளாகத்தில் பணிபுரியும் ஏராளமான பணியாளர்களுக்கு, பணம் மீள எடுப்பது, வைப்பு செய்வது, நிகழ் நேர நிதிப் பரிமாற்றங்கள், கிரெடிட் கார்டு செட்டில்மென்ட்கள், கையடக்க தொலைபேசி ஊடாக பணப் பறிமாற்றம், மொபைல் ரீலோட்கள், மற்றும் பிற கட்டண செலுத்தல்கள் போன்ற சுயவங்கித் தேவைகளுக்கு வசதியான சேவையை வழங்கும்.

இந்த நிகழ்விற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், HNBஇன் டிஜிட்டல் வங்கிச் சேவையின் சிரேஷ்ட முகாமையாளர் சக்ஷிக அமரவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

## JAT Holdings PLC கென்யாவில்

# 'JAT Paints Africa Limited' ஆபிரிக்கா சந்தையில் முன்னேற்றம்

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவில் மரப் பூச்சு தயாரிப்பில் சந்தையில் முன்னிலை வகிக்கும் JAT Holdings PLC, கென்யாவை தளமாகக் கொண்ட பன்முக வணிக நிறுவனமான Mayleen Corp உடனான கூட்டு வர்த்தக முயற்சி மூலம், 2023 ஜூலையில், "JAT Paints Africa Limited" என்ற நிறுவனத்தை கென்யாவில் கூட்டிணைப்பு செய்ததன் மூலம் ஆபிரிக்காவுக்கு தனது செயல்பாடுகளை உத்தியோகபூர்வமாக விஸ்தரித்துள்ளது. அதன்படி, JAT Holdings PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளரான ஈலியன் குணவர்தன மற்றும் கென்யாவில் உள்ள Mayleen Corp இன் உறுப்பு நிறுவனமான Mayleen (K) Limited இன் முகாமைத்துவப் பணிப்பாளரான ருவன் பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து கூட்டு வணிக முயற்சி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.




இந்த மூலோபாய நடவடிக்கையானது தெற்காசியாவில் அதன் மிகச் சிறப்பான வெற்றியைத் தொடர்ந்து, ஆபிரிக்கா முழுவதும் மரப் பூச்சுகளில் முன்னணியில் இருக்கும் JAT இன் ஸ்தானத்தை வலுப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.இந்த கூட்டாண்மை மூலம், JAT Holdings தற்போது கென்யா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா முழுவதும் உள்ள முக்கிய சந்தைகளில் Sayerlack மரப் பூச்சுக்கள் வர்த்தக நாமம் மற்றும் ஏனைய JAT தயாரிப்புகளை உற்பத்தி செய்து, விநியோகிக்க முடியும்.

# அமானா வங்கிக்கு IFN விருதுகள்

சர்வதேச இஸ்லாமிய நிதிச் சேவைகள் துறையில் காணப்படும் சிறந்த மற்றும் முன்னணி செயற்பாட்டாளர்களை கௌரவிக்கும் முன்னணி விருதுகள் வழங்கும் அமைப்பான IFN விருதுகள் அமைப்பினூடாக 2022 ஆம் ஆண்டில் சிறப்பாக செயலாற்றியிருந்த நிதிச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக அமானா வங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. மலேசியாவை தளமாகக் கொண்ட RedMoney Group இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த IFN விருதுகள் 2022 இல், இலங்கையின் சிறந்த இஸ்லாமிய வங்கி எனும் உயர் விருதையும், இலங்கையின் சிறந்த கூட்டாண்மை வங்கி, சிறந்த டிஜிட்டல் சேவை வழங்குநர், சிறந்த விற்பனையாளர் வங்கி மற்றும் மிகவும் புத்தாக்கமான வங்கி ஆகிய விருதுகளையும் அமானா வங்கி தனதாக்கியிருந்தது.



சிறிய, நடுத்தரளவு துறை மற்றும் விற்பனைப் பிரிவுகளுக்கு ஆதரவளிக்கும் அமானா வங்கியின் சிறந்த செயற்பாடுகளுக்கான எடுத்துக்காட்டாக மாத்திரம் இந்த விருதுகள் அமைந்திராமல், இலங்கையிலுள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வங்கிச் சேவைகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்புக்கும் கௌரவமாக அமைந்துள்ளது.

டிஜிட்டல் வங்கிச் சேவைகள் பிரிவில் வாய்ப்புகளை இனங்காணல் மற்றும் வளர்ச்சியடைதல் ஆகியவற்றிலும், புத்தாக்கமான மக்களுக்கு நட்பான நிதித் தீர்வுகளை வழங்குவதிலும் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதிலும் வங்கி காண்பிக்கும் அதீத கவனம் செலுத்துகைகளுக்கு IFN இனால் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

## TEDxColombo: வழக்கத்திற்கு மாறான கண்ணோட்டத்துடன்

# இலங்கையை ஊக்கப்படுத்தும் முயற்சி

பெருமதிப்பிற்குரிய வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வாகவும் மற்றும் இலங்கையின் மிகப் பழமையான மற்றும் மிகப்பாரிய TEDx நிகழ்வுகளில் ஒன்றுமான TEDxColombo, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 12 ஆவது நிகழ்வை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. 2023 ஆகஸ்ட் 27 அன்று, புகழ்பெற்ற Monarch Imperial இல் இடம்பெறவுள்ள TEDxColombo மீண்டும் சிந்தனைகளைத் தூண்டி, ஆழமான கலந்துரையாடல்களை வளர்க்கும் என்பதுடன், நாடு முழுவதும் ஒற்றுமை உணர்வையும் தூண்டும். இந்நிகழ்வு பரந்த சமூகத்தை எட்டி, பயனளிப்பதற்காக, முன்னணி சமூக வலைத்தளங்களில் நேரலையில் ஒளிபரப்பப்படும்.



2009 இல் ஸ்தாபிக்கப்பட்ட TEDxColombo, தொடர்ச்சியாக சிந்தனைகளின் ஆற்றலை வழிநடாத்தி, அசாத்திய திறமை கொண்ட உள்ளூர் பேச்சாளர்களை மேடைக்குக் கொண்டு வந்து, அவர்களின் உரைகளை உலகெங்கிலும் ஒலிக்கச் செய்துள்ளது. அவர்களுடைய செல்வாக்கு மிக்க உரைகள் உலகளாவிய TED தளத்தில் பல மில்லியன் கணக்கானவர்கள் பார்ப்பதற்கு காணொளிகளுடன், அருகாமையிலும், தொலைவிலும் உள்ள சமூகங்கள் மத்தியில் உரையாடல்களைத் தூண்டி, மாற்றத்திற்கு வித்திட்டுள்ளன.

இந்த வருடத்தின் கருப்பொருளான 'REvolution' அமைந்துள்ளதுடன், TEDxColombo ஆனது, தைரியமான கருத்துக்களை ஆதரிக்க தனிநபர்கள் ஒன்றிணைந்து, சிறந்த எதிர்காலத்திற்கான வரையறையற்ற சாத்தியக்கூறுகளைத் தொடங்கும்போது வெளிப்படும் புரட்சிகரமான ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபடும். தொலைதூர இயக்கங்களின் தாக்கம் முதல் உலகளவில் மக்களை ஒன்றிணைத்த புரட்சியின் உணர்வு வரை, நமது சமூகம் எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத அடுத்த படியை கற்பனை செய்ய நவீன மாற்றத்தை உருவாக்குபவர்களுக்கு இந்த நிகழ்வு சவால் விடும். இந்தக் கருத்துக்கள் தனிமனித வாழ்வில் மட்டுமன்றி, நமது சமூகத்தின் கூட்டு முன்னேற்றத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

## பாடசாலை மாணவர்களுக்காக 'Sisu Divi Pahana' ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடும் Haycarb



Hayleys குடும்பத்தின் துணை நிறுவனமான Haycarb PLC, அதன் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மாதம்பே, படல்கம, வேவல்துவ, களுத்துறை, மஹியங்கனை, பதவிய மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள 13 பாடசாலைகளில் 700 மாணவர்களுக்கு போஷாக்கான மதிய உணவை வழங்கும் "சிசு திவி பஹன" திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

உயர் பெறுமதியான செயற்படுத்தப்பட்ட கார்பன் தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Haycarb, இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றுகிறது. இந்த ஆண்டும், Haycarb தனது வணிக நடவடிக்கைகளில் ஒரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தொடர்ச்சியான சமூக சேவை முயற்சிகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக, பின்தங்கியுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு மதிய உணவு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Haycarb Sisu Divi pahana முதலில் Haycarb PLC ஆல் நேரடியாக திரட்டப்பட்டது, அதன் பின்னர் ஊழியர்கள் தங்கள் தன்னார்வ பங்களிப்புடன் அதில் இணைந்தனர். இந்தப் பணத்தை பயன்படுத்தி பாடசாலைகளைச் சுற்றியுள்ளவர்கள் சேர்ந்து அனைத்து உணவுகளையும் தயாரித்து ஒவ்வொரு பாடசாலைக் குழந்தைக்கும் சமமான, ஆரோக்கியமான தினசரி உணவை வழங்குகிறார்கள்.

## வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் எயார்டெல் லங்கா

இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருந்தபோதிலும், நாட்டிலுள்ள இளைஞர்களிடையே மிகவும் விருப்பமான தொலைத்தொடர்பு நிறுவனமாக விளங்குகின்ற எயார்டெல் லங்கா, கடினமான காலகட்டங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் என்ற அதன் தலையாய நிலைப்பாட்டை மீண்டும் உறுதிபட தெரிவித்துள்ளது.

'ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கையில் நாம் முதன் முதலில் செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்திலிருந்து, எயார்டெல் ஒரே இலக்கை நோக்கியே பயணித்தது. உலகத் தரம் வாய்ந்த நெட்வொர்க் அனுபவத்தை வழங்கவும், அதிகபட்ச பெறுமதி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக காணப்பட்டது. குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகளில், இந்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றியுள்ளோம். சிறந்த முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களை வழங்கி, வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்க நாம் நடவடிக்கை எடுத்து அதனை செய்து காட்டினோம். அத்துடன் புத்தாக்க உற்பத்திகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தோம்' 'இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் கடினமான வரலாற்றுச் சவால் நிறைந்த இக்காலப்பகுதியில் எமது வாடிக்கையாளர்களுக்கு உதவக்கூடிய எமது அர்ப்பணிப்பிலும், அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாக நின்றோம்.

அவர்கள் எதிர்கொள்ளும் சுமையை தளர்த்தவும், எமது உலகத் தரம் வாய்ந்த வலையமைப்பை நம்பியிருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி, தொழில், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்ந்து இணைந்திருப்பதற்கு விலையானது ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதே எமது நோக்கம்' என எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷீஸ் சந்திரா தெரிவித்தார்.

## யூனியன் அஷ்யூரன்ஸ் விநியோக வருடாந்த விருதுகள் 2022

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது விநியோக வருடாந்த விருதுகள் 2022 நிகழ்வை 'League of Legacy,' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்தது.

நிறுவனத்தில் சிறப்பாக செயலாற்றியிருந்த ஊழியர்களுக்கு இந்த நிகழ்வில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

வெண்கலம், வெள்ளி, தங்கம், டயமன்ட், பிளாட்டினம் மற்றும் உயர் விருதுகள் பிரிவுகள் என்பவற்றில் விருதுகள் வழங்கும் வைபவத்தில் சிறந்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். 400 க்கு அதிகமானவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.



நிகழ்வின் அல்டிமேட் சம்பியன் விருதை, சிலாபம் பிராந்தியத்தைச் சேர்ந்த சானக அப்புஹாமி பெற்றுக் கொண்டதுடன், கிருலப்பனை பிராந்தியத்தின் உபுல் பிரியந்த, தேசிய புதிய வியாபார சம்பியனாக தெரிவாகியிருந்தார். சிறந்த பிராந்தியத்துக்கான விருதை சிலாபம் பிராந்தியம் பெற்றுக் கொண்டது. சிறந்த வலயம் (சிறிய முதல் நடுத்தரளவு பிரிவு) தென் 3 வலயம் பெற்றுக் கொண்டதுடன், சிறந்த வலயம் (பாரிய பிரிவு) மெட்ரோ சிற்றி 1 வலயம் பெற்றுக் கொண்டது.

## நாட்டின்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் எதிர்க்கட்சி எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சமிந்த விஜேசிறி எம், பி தமது கேள்வியில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியின்போது, மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இயங்கியது என்றும் அந்த சந்தர்ப்பத்தில் அந்த அமைச்சுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் மற்றும் செயலாளரின் பெயரை தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அது தொடர்பில் தொடர்ந்தும் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், சபாநாயகரினால் தெரிவிக்கப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நாம் சபையில் செயற்படுவதற்குத் தயார். ஆனால், பிணைமுறி மோசடி நல்லாட்சி அரசாங்கத்தில் நடைபெற்ற போது அதனைப் பாதுகாத்தவர்கள் , தற்போது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு சபையில் அது தொடர்பில் தெளிவில்லாத கேள்விகள் எழுப்புவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுவும் அந்த சம்பவம் இடம்பெற்ற போது அதற்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் யார் என அவர் கேள்வி கேட்டுள்ளார். அதனை அவர் மறந்துவிட்டாரா என நான் கேட்க விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊழல் எதிர்ப்பு ... (03 ஆம் பக்கத் தொடர்)

ராஜபக்ஷவினால் 2023 ஏப்ரல் 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் ஜுன் 21 மற்றும் ஜுலை 06ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இதற்கமைய இது 2023 ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டமாக நேற்று (08) முதல் நடைமுறைக்கு வருகிறது. சபாநாயகர் சான்றுரைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர மற்றும் சட்டவாக்கப் பணிப்பாளரும், தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## யாழிலுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

சிங்கள அமைப்புக்களால் இந்த முறைப்பாடு தொடர்பான கடிதம் சபையின் அதிகாரியிடம் (07) கையளிக்கப்பட்டுள்ளது. இதன்போது இந்த அமைப்பினர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், கறுப்பு ஜுலை இன அழிப்பை தொடர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்த சிங்களவர் பலவந்தமாக வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில், இலங்கை பாதுகாப்பு படையினர் தமிழ் மக்களை துன்புறுத்துவதாக அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டு பொய்யானது. யாழ்ப்பாணத்தை விட அதிகளவான தமிழ் மக்கள் கொழும்பில் இருக்கின்றனர். அத்துடன், யாழ். மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இருக்கிறார்கள். அவர்கள் இங்கு சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். சிங்கள மக்களின் மனித உரிமைகளும் இந்நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மற்றும் சிங்களம் உள்ளிட்ட அனைத்து மக்களும் சமாதானத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோருவதாகவும் அந்த அமைப்பு அறிக்கை விடுத்துள்ளது.

## முல்லை... (03 ஆம் பக்கத் தொடர்)

கடல் பகுதியில் (07) அதிகாலை 02 திருகோணமலை கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமான முறையில் நாயாற்று கடல் பகுதியில் டோலர் மீன்பிடி படகு ஒன்று நிற்பதனை அவதானித்துள்ளனர்.

பின்னர் இந்நபர்களிடம் விசாரணை செய்தபோது இந்தியாவிலிருந்து மீன்பிடிக்கு வந்தது தெரியவந்துள்ளது. இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைக்காக கடற்படையினர் அழைத்து சென்றுள்ளனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்படுவர்.

## தமிழ்நாட்டு... (03 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பாக எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது :

“பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கிறது. INDTN06MM948 பதிவு எண் கொண்ட படகில் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்து மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில், இதுவரை 93 மீனவர்கள் கைது செய்யப்பட்டு 14 படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த 30 நாட்களில் 3 வெவ்வேறு சம்பவங்களில் 34 தமிழ மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் மீனவர்களுக்கு பெரும் துன்பத்தையும் துயரத்தையும் அளிக்கிறது.இலங்கை சிறையில் வாடும் 19 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து, அவர்களை தாயகம் அழைத்து வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களை பாதிக்கும் இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வினை காண முன்வருமாறும் முதலமைச்சர் ஸ்டாலின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## ஐந்து அம்சங்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சிறுவனின் செயலிழந்த இடது பக்க சிறு நீரகத்தை அகற்றுவதற்குப் பதிலாக,திறம்படச் செயற்பட்ட

வலது பக்க சிறுநீரகம் அகற்றப்பட்டிருக்கிறது. இதனால்,முஹம்மட் ஹம்தி என்ற மூன்று வயதுக் குழந்தை பரிதாபகர மாக உயிரிழந்த சம்பவம் நாட்டில் பெரிய அதிருப்தி அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.ஆனால்,அறுவைச் சிகிச் சையில் நடந்த தவறை மறைக்கும் வகையிலேயே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால்,இச்சிகிச்சைக்குப் பின்னால் பாரிய மோசடி இடம்பெற்றிருப்பதாக பலத்த சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. தவறுதலாக நடந்ததாக அல்லது திட்டமிட்டுத் திருடப்பட்டதா என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

அவயங்கள் அபகரிப்பு மற்றும் சிறுநீரக மோசடியுடன் தொடர்புடைய மோசடிப் பேர்வழிகளின் கரங்கள் இதற்குப் பின்னாலிருந்திருக்கலாம். எனவே,இது குறித்த

பின்னணிகளை அறிவதற்கு சுதந்திரமானதும்,நியாய மானதுமான விசாரணைகளை நடத்துமாறு நான், கோருகிறேன். மருத்துவத்துறையை மாபியாக்களின் செல்வாக்கிற்குள் கொண்டு வரும் இவ்வாறான மறைமுக முயற்சிகளை நிறுவத்துவதற்கு இவ்விசாரணைகள் உதவட்டும். சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில்,இவ்வி சாரணைகள் அமைவது அசியம்.தங்களது நேர்மையான தலைமைத்துவம் இதைச் செய்யுமெனவும் நான்,நம்புகி றேன்.

மருத்துவ நிபுணர்கள்,தடயவியல் திறமையாளர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களைக் கொண்ட குழுவினரின் தலைமையில் விசாரணை நடாத்தப்படல்.

முஹம்மட் ஹம்தியின் சிறுநீரக அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்டிருந்த அறுவைச் சிகிச்சையாளர்கள்,வைத்தியர்கள்,தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களை விசாரணைக்குட் படுத்தல்.

சிறுவனின் சிறுநீரக மோசடியுடன் தொடர்புற்றிருந்த சகல வஞ்சகர்களையும் சட்டத்தின் வெளிச்சத்துக்கு கொண்டு வருதல்.

குழந்தையின் சிறுநீரக சிகிச்சை சம்பந்தமான தகவல்களை வழங்கு வோரின் அல்லது வழங்க முன்வரு வோரின் இரகசியங்களைப் பாதுகாத்தல்.

அறுவைச் சிகிச்சைகளின்போது அவயங்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் வகையில்,பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றை வலியுறுத்தியே அஸாத்சாலி இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

## தேசிய கொள்கை...

இலங்கையி தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் பணச்சலவை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களைத் தடுத்தல் பற்றி அடையாளம் காணப்பட்டுள்ள பலவீனங்களுக்கு தீர்வுகளாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் உள்ளடங்கியதான செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நாட்டில் சுமார் 40,000...

பல பிரிவுகளை பிரதிநிதித்துவப்படும் அவர்கள் எந்தவொரு தகைமையுமின்றி, நோயாளருக்கு சிகிச்சையளிப்பதாக ஊடக பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவிக்கும்போதே ஆவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இது பாரிய பாரதூரமான விடயமாகுமென்றும் அவர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில், பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

## சச்சின் டெண்டுல்காரினால்...

திங்கட்கிழமை நடைபெற்றது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிகளை சச்சின் டெண்டுல்கர் வழங்கினார். இதன்போது,பாடசாலை மாணவர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவுக்கான நல்லெண்ணத் தூதுவராக 2013 ஆம் ஆண்டு சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சச்சின் டெண்டுல்கர் 200 டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்கள் உட்பட 15,921 ஓட்டங்களைக் குவித்தவர். 463 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 49 சதங்கள் உட்பட 18,426 ஓட்டங்களையும் குவித்திருந்தார். ‘மாஸ்டர் பிளாஸ்டர்’ என்ற பட்டமும் ரசிர்களால் இருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுப் போக்குவரத்து சேவையை...

இலங்கையின் பொதுப் போக்குவரத்துத் துறையில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி, தேசிய போக்குவரத்துக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கும், பொதுப் போக்குவரத்து சேவையில் ஒருங்கிணைந்த நேர அட்டவணைகள் மற்றும் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே ஆகியோரின் பங்குபற்றுலுடன் இது தொடர்பான கலந்துரையாடல் (07) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

பயணிகள் போக்குவரத்து துறையில் காணப்படும் நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பயணிகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துத் துறையில் உயர் தரத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள E ticketing முறைக்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். ஏழு, தேசிய பஸ் சங்கங்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதால், இது தொடர்பில் மாகாண மட்டத்தில் கூடிய விரைவில் கருத்துக்கள் பெறப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டுள்ளார்.

## நம்பிக்கையில்லா பிரேரணை மீது...

அபேவர்த்தன தலைமையில் கூடியபோது, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் இதற்கான பிரேரணையை சமர்ப்பித்துள்ளதாகவும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம், நாளை வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெறும் எனவும் அதற்கு, உரிய அமைச்சரும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணையை நாளை வியாழன் விவாதம் செய்ய அவசரமில்லையென ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்லவும் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் வாரத்தில் எந்த திகதி இருந்தாலும் தரலாமென சபை முதல்வர் அவர்களிடம் மீண்டும் கேட்டுள்ளார். இதற்கு பதிலளித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கிரிக்கெட் நிறுவனத்தின் பிரச்சினை குறித்து அடுத்த வாரம் விவாதம் நடத்தப்படும் எனவே அது முக்கியமானதென தெரிவித்துள்ளார்.

சபாநாயகர், பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் என்ற வகையில், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அவரது பிரதிநிதிகளுக்கு செப்டம்பர் தொடக்க வாரத்தில் ஒரு நாள் அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவரும் அவரது பிரதிநிதிகளும் அதற்கு உடன்படவில்லை, “எங்களுக்கு எந்த அவசரமும் இல்லை” என்பதே அவர்களின் பதிலாக இருந்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகர் சுசில் பிரேம்ஜயந்த், நிமல் சிறிபால டி சில்வா, ஜி.எல். பீரிஸ், ரஞ்சித் மத்துமபண்டார, வஜிர அபேவர்த்தன, சாகர காரியவசம், எம்,ஏ . சுமந்திரன், எரான் விக்கிரமரத்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி லொகுகே, ஏ.எல்.எம். அதாவுல்லா பங்கேற்றுள்ளதுடன், நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த ஐக்கிய மக்கள் சக்தி விவாதம் நடத்துவதற்கான திகதியை நிர்ணயிப்பதில் தயங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தொல்லியல் ஆய்வுகள் இனங்களை...

வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.இதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களும் கௌரமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை. தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

## சிறுவர்களுக்கு இயற்கை நீர்...

சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா பெற்றோர்களிடம் கேட்டுள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் (07) ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்ததாவது: பகல் வேலையில் வெப்பநிலை அதிகரிப்பதால் சிறுவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும். இதன்போது அதிகமாக இயற்கையான நீர் ஆகாரங்களை சிறுவர்களுக்கு வழங்க வேண்டுமென விசேட சிறுவர் வைத்திய நிபுணர் குறிப்பிட்டார்.

இளநீர், எலுமிச்சை, தோடை, நாரைத் தோடை, மாதுளை, கஞ்சி போன்ற குடிபானங்களை நீரிழப்புத் தன்மையைத் தவிர்ப்பதற்காக அருந்துவது அவசியம். அதிகரித்த வெப்பத்தால் தலைவலி, வாந்தி, தூக்கமின்மை, அல்லது அதிகரித்த தூக்கம் ஏற்படுவதுடன் உணவுகளின் சுவை குறைதல் போன்ற நிலைமைகளும் சிறுவர்களுக்கு ஏற்படலாமென அவர் விபரித்தார். இவ்வாறான காலகட்டத்தில் நீர் அருந்தாது சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லுதல், விளையாடுதல் மற்றும் வீதிகளில் சுற்றித் திரிதல் போன்றவற்றால் சகலருக்கும் நீரிழப்பு நிலை மற்றும் வெப்ப அதிர்ச்சி நிலைமைகளை எதிர்கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மின்சார உற்பத்தி, விவசாயத்துக்கு...

அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், மின்சாரத்தை கொள்வனவு செய்யும் விடயத்திலும் எவருக்கும் பயப்படப்போவதில்லை.கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதில் பின்னிற்க மாட்டோம். ஏனென்றால், நாம் தேர்தலை இலக்காகக் கொண்டு செயற்படுபவர்கள் அல்ல.

தடையின்றி மின்சாரம் விநியோகிப்படுமென மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை பாதுகாப்போம். அதேபோன்று விவசாயத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் தேவையான நீரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சமனல வெவ அணையிலிருந்து உடவளவை விவசாய பிரதேசங்களுக்கு நீரைத் தடையின்றி விநியோகித்தால் எதிர்வரும் (16) பின்னர் சமனல வெவ அணையின் ஊடான நீர்மின்னுற்பத்தி ஸ்தம்பிதமடையலாம்.

இவ்வாறான அவசர நிலையில் மின்சாரத்தை கொள்வனவு செய்யாவிட்டால் காலி, மாத்தறை, இரத்தினபுரி,ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தினமும் 03 மணித்தியாலங்கள் மின்சார விநியோகத்தைத் துண்டிக்க நேரிடும். எந்த வகையிலும் தற்போது மின்சாரத்தை துண்டிப்பது சாத்தியமற்றது. சமனல வெவ நீர்தேக்கத்திலிருந்து உடவளவை பகுதி விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை விடுவிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும், நீர் மின்னுற்பத்திக்காக மாத்திரமே சமனல வெவ நீர்த்தேக்கத்தில் நீர் சேமிக்கப்படுகின்றது. உடவளவை விவசாய நடவடிக்கைகளுக்கும்,நீர்ப்பாசன தேவைகளுக்கும் நீரை விடுவிக்குமாறு எந்த ஒப்பந்தமோ அல்லது இணக்கப்பாடோ மேற்கொள்ளப்படவில்லை.

## பாரிய வர்த்தகமாக மாறியுள்ள...

வழங்கப்படுவதை தடுக்கும் வகையில், பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கௌரவ பட்டங்களையும் பெயர்களையும் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதிக்கு மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், வேறு நிறுவனங்கள் இவ்வாறான விருதுகளை வழங்குவதற்கு எந்த சட்ட ஏற்பாடுகளும் கிடையாது என்பதையும் கல்வியமைச்சர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் புத்திக்க பத்திரண எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

புத்திக்க பத்திரண எம்.பி, தமது கேள்வியின் போது: பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்தியாஜோதி, வித்தியா கீர்த்தி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற கௌரவ நாமங்கள் மற்றும் கௌரவ பட்டங்களையும் பதவிகளையும் வழங்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் எவை என கேள்வி எழுப்பினார். இக்கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கௌரவ நாமங்கள், கௌரவ பட்டங்கள் மற்றும் பதவிகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதியினால் மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஒன்று இவ்வாறான பட்டங்கள் மற்றும் பதவிகளை வழங்குவதானால் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகள் அடங்கிய சுற்றுநிருபம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதியினால் நாட்டின் பிரஜைகளுக்கு இவ்வாறான விருதுகளை வழங்க முடியும். அது தொடர்பிலும் சட்டம் காணப்படுகிறது.அவ்வாறு விருது வழங்குவதானால், அதற்காக பகிரங்க விண்ணப்பம் கோரி, அதனை நிபுணர்கள் குழு பரீட்சித்துப் பார்த்து அனுமதிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு முறைகள் அன்றி வேறு எந்த நிறுவனங்களுக்கும் இவ்வாறு விருது வழங்குவதற்கு சட்டத்தில் இடம் கிடையாது. சில நிறுவனங்கள் முன்னெடுக்கும் இத்தகைய செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எயது நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

## கந்தானை இரசாயன உற்பத்தி...

வாகனங்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன. இத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தால், இரசாயனக் கழிவுகள் வெளியேறியதால், பாடசாலை மாணவர்கள் 102 பேர் திடீரென சுகவீனமடைந்தனர். ராகம வைத்தியசாலையில் இவர்கள் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுத்திகரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் தயாரிக்கும் இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயால், முகாமையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ முற்றிலுமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

## நிலுவைத் தொகை இருப்பின்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போராட்டத்துக்கு பின்னர் கட்சியை பலப்படுத்தியுள்ளோம். ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் முடிவடைந்து விட்டதாக ஒரு தரப்பினர் எதிர்பார்த்தனர் . பாரிய போராட்டத்துக்குப் பின்னர் பலமடைந்துள்ளோம். ராஜபக்ஷக்கள் மீது நாட்டு மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளனர். திருமண விழாவுக்கு பயன்படுத்திய மின்சாரத்துக்கான கட்டணத்தை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ செலுத்தவில்லை என்ற புதிய அரசியல் பிரசாரத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது முன்னெடுத்துள்ளனர். இவ்விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் வினவினேன். இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல், 'திருமண விழாவுக்கு பயன்படுத்திய மின்சாரத்துக்கு இதுவரை கட்டணம் செலுத்தவில்லை என்று இலங்கை மின்சார சபை இதுவரை அறிவிக்கவில்லை. மின்சார நிலுவை தொகை ஏதும் இருப்பதாக மின்சார சபை அறிவித்தால் அதை செலுத்த தயார்' என குறிப்பிட்டார். பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மின்கட்டணத்தை செலுத்தவில்லை என்ற விவகாரம் தற்போது அரசியல் தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது. கடந்த காலங்களிலும் இதுபோன்ற பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. ஆனால் எந்த குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## டுபாயில் மறைந்து இயங்கும்...

அறவிடுதல், கொலைகள் என்பவற்றை இக்குழு டுபாயிலிருந்தவாறு இலங்கையில் மேற்கொள்கிறது. இக்குழுவினரை அந்நாட்டுப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வ ர, பொலிஸ் திணைக்களமும் சட்டம், ஒழுங்கு அமைச்சும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.34 பாதாளக் குழு உறுப்பினர்கள் டுபாயிலிருந்தவாறு இலங்கையில் பல குற்றச் செயல்களைப் புரிந்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை, இலங்கை வர்த்தகர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்து அவர்களிடமிருந்து கப்பம் பெறும் இரு வலையமைப்புச் செயற்படுவதாகவும் அண்மையில் தகவல் வெளியாகியிருந்தது. இவ்வலையமைப்பை இயக்கிய முக்கிய நபர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, மேலும் இரு குற்றவாளிகள் வலையமைப்பு குறித்த தகவல்களை வெளியாக்கினர். இவ்வாறு மிரட்டல் விடுத்து கோடிக்கணக்கில் கப்பம் கோரும் துபாயில் பதுங்கியிருக்கும் திட்டமிட்ட குற்றவாளிகள் இருவர் தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக நீர்த் தேக்கங்களின்...

மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 49 அடி நேற்று செவ்வாய்க்கிழமை காலை குறைந்துள்ளதென நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடும் வெப்பம் நிலவுவதால் இப்பகுதியில் குடி நீர் தட்டுபாடு நிலவிவருகிறது. குறிப்பாக பெருந்தோட்ட பகுதிகளில் சுத்தமான குடிநீர் பெற்று கொள்ள முடியாத நிலையில் மக்கள் உள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான காலநிலை தொடரும் பட்சத்தில் பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கும் நிலை உருவாகலாம்.

நீர் மின் நிலைய உற்பத்திக்கு நீரை வழங்கும் பிரதான நீர் தேக்கமான மவுசாகல நீர் தேக்கத்தில் , கடந்த ஆண்டு முதல் இன்று வரை மிக மிக குறைந்த நீரையே சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நீர் தேக்கங்கள் நீர் மின் நிலைய மின் உற்பத்திக்காக பயன்படுத்தபடுகின்றன.

## தங்கத்தின் விலையில்...

1,56,300 ரூபா என்ற நிலையில் தொடர்ந்து வந்தது. இந்நிலையில்,நேற்றைய தினம் தங்கத்தின் விலை குறைந்துள்ளதாக செட்டியார்தெரு தகவல்கள் கூறுகின்றன.

இதன்படி நேற்று 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 1,55,400 ரூபாவாக பதிவாகியது. 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 1,68,000 ரூபாவாக காணப்படுகிறது.இதேவேளை நேற்று (08) மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூபா 3,15.1109 ஆகவும், விற்பனை விலை ரூபா 3,28.6038 ஆகவும் பதிவாகியுள்ளது.

எனினும், நேற்று முன்தினம் (07) நாணய மாற்று வீதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 3,28.57 ரூபாவாகவும், கொள்வனவு விலை 3,15.05 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

அதன்படி பார்க்கும் போது நேற்று முன்தினத்தை விட நேற்று டொலரின் பெறுமதி சிறியளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இவ்வாறான சூழலில் கடந்த சில நாட்களாகவே டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது வீழ்ச்சியை பதிவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரத்தில் முன்னேற...

ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை கற்றுக்கொண்ட விடயங்களில் ஒன்று, இந்த வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமானால் நாம் போட்டிப் பொருளாதாரத்துக்கு செல்ல வேண்டும். ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் நாம் பாடுபட வேண்டும். இதில் அதிக கவனம் செலுத்துதல் அவசியம். மேலும், பொருளாதாரத்தை மறுசீரமைப்பதில், தனியார் துறைக்கும் பொருளாதாரத்தில் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். தனியார் துறைக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க அரசு எப்போதும் தயாராக உள்ளது.

ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தக வசதி திட்டத்தின் காரணமாக உலக வர்த்தகத்தில் இலங்கைக்கு நேரடியாக பங்களிப்பை வழங்க முடியும். மேலும், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் மாற்றம் மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும். 21ஆம் நூற்றாண்டின் பொருளாதார முறைமை நாட்டுக்கு அவசியமானது. 20 ஆம் நூற்றாண்டின் பொருளாதார முறைகள் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போதுமானதாக இல்லை. எனவே, 20 ஆம் நூற்றாண்டின் முறைகளை மாற்றுவதன் மூலம், அனைத்து நடைமுறைகளுக்கும் எடுக்கும் நேரத்தைக் குறைத்து வணிக சமூகத்திற்கு உதவும் ஒரு முறை நமக்குத் தேவை. அதற்கு டிஜிட்டல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது.

முதலீடாக இருந்தாலும் வர்த்தகமாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை விரைந்து முடிக்க புதிய பொருளாதார ஆணைய சட்டத்தின் ஊடாக திட்டங்களை தயார் செய்வது அவசியம். இதற்கேற்ப நாமும் மாற வேண்டும்.

இல்லையெனில், ஒரு நாடோ பொருளாதாரமோ முன்னேறாது. பொருளாதாரம் டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி நகரும் போது, அனைத்துமே அதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

நாங்கள் புதிய சந்தை வாய்ப்புகளைத் தேடினோம். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டோம் . பிராந்திய விஸ்தரிப்புப் பொருளாதார கூட்டணி (RCEP) உடன் இணைவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பாரிய வர்த்தக வாய்ப்பாக கருதலாம். வர்த்தக வசதி மற்றும் டிஜிட்டல் மாற்றம் இல்லாமல் அந்த சந்தையில் நுழைய முடியாது. மேலும், சந்தையை விரிவுபடுத்த இந்தியாவுடன் ஆலோசித்து வருகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம் அல்லது அமெரிக்க சந்தைகளை கையாளும் போது, வர்த்தக வசதி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன இலங்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

வர்த்தக ஒருங்கிணைப்பை நாடென்ற ரீதியில் இலங்கை ஊக்குவிப்பதோடு வர்த்தக ஒருங்கிணைப்பு, வர்த்தக வசதி மற்றும் வர்த்தகம் செய்வதற்கான வசதி பற்றிய சுட்டெண்ணில் இலங்கையை உயர்நிலைக்கு கொண்டுவர எதிர்பார்க்கிறோம்.ஆனால் இதற்கெல்லாம் உலகளாவிய வர்த்தக கட்டமைப்பு தேவை.

உலக நாடுகளின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவிய உலக வர்த்தக அமைப்பின் (WTO) விதிமுறைகளை கடைபிடிப்பது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவுகிறது. தெற்காசியாவே இந்த பொருளாதார சட்டங்களையும் விதிமுறைகளையும் பின்பற்றுகிறது. பொருளாதார வேகத்தை சீர்குலைக்க நாங்கள் தயாரில்லை.

உலகப் பொருளாதார விதிகளை மாற்ற வேண்டும் என்றால் அதற்கு அனைவரின் சம்மதத்தையும் பெற வேண்டும். இச்சட்டங்கள் இலங்கையை பாதிக்கக் கூடியன. யானைகள் சண்டையிடும்போது புல் நசுங்குகிறது. அனைவரும் பயன்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். தெற்காசியாவைப் போலவே இலங்கையும் உலக வர்த்தக அமைப்பின் விதிகளைப் பின்பற்ற விரும்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, முதலீட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜேர்மனியின் பிரதித் தூதுவர் ஒலஸ்ச் மல்க்ஸ்லோ மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.




# விவசாயத்தின் போர்வையில் இரத்தினக்கல் அகழ்வு முயற்சி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் நெற்செய்கைக்காகக் குளத்தை பயன்படுத்துவதாக கூறி இரத்தினக்கல் அகழ்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு இரத்தினபுரி இணைப்புக் குழுக்கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியை இரத்து செய்யக்கோரி இரத்தினபுரி இணைப்புக் குழு கூட்டத்தில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள ஆகியோரின் இணை தலைமையில் நேற்று முன்தினம் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இணைப்புக் குழு கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரத்தினபுரி குருவிட்ட பொடிவெவ குளத்தின் நீரால் நெற்பயிர்ச் செய்கை செய்வதாகக் கூறி குளத்தை தோண்டி சுத்தம் செய்வதற்கு இப்பிரதேசத்திலுள்ள ஒரு குழுவினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை காலமும் இக்குளத்தை பயன்படுத்தி எவரும் நெற்பயிர்செய்கை மேற்கொள்ளவில்லை.

எனவே திடீரென குளத்தை தோண்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இக்குளத்திலுள்ள இரத்தினக்கல் கனிய மண்ணை பெற்று இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக இணைப்பு குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் யுனிசெப் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகள் நேற்று கே/பல்லேகெனுகல கனிஷ்ட வித்தியாலயத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.
இந்நிகழ்வுகளில் யுனிசெப் நிறுவன தெற்காசியத் தூதுவரும் இந்திய கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவருமான சச்சின் டெண்டுல்கார் கலந்து சிறப்பித்தார்.
குழந்தைகளுடன் கிரிக்கெட் விளையாடுதல், கிரிக்கெட் உபகரணங்கள் மற்றும் பரிசுப்பொருட்களை வழங்குதல், கிரிக்கெட் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய நிகழ்வுகளில் மாகாண ஆளுநருடன் சச்சின் டெண்டுல்கரும் கலந்து கொண்டார்.
(படங்கள் : இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

## கடும் வெப்பமான காலநிலை

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



மத்திய மலை நாட்டில் நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து வருகின்றது.

குறிப்பாக மவுசாகல, காசல் ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய ,நவலக்சபான, விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்து வருகின்றது.

மவுசாகல நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 49 அடிக்கு நேற்று குறைவடைந்துள்ளதாக நீர்மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடும் வெப்பம் நிலவுவதால் இப்பகுதியில் குடிநீர் தட்டுபாடு நிலவிவருகிறது.

குறிப்பாக பெருந் தோட்ட பகுதிகளில் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இவ்வாறான காலநிலை தொடரும் பட்சத்தில் பெருந்தோட்டத்துறையிலும் பாதிப்பு ஏற்படலாம்.

நீர்மின் நிலைய உற்பத்திக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த்தேக்கமான மவுசாகல நீர்த்தேக்கம் கடந்த ஆண்டு முதல் இன்று வரை மிக மிக குறைந்த நீரையே சேமித்து வைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# குடும்ப தகராறில் மனைவியை கொலை செய்துவிட்டு கணவன் தற்கொலை

## பொலிஸார் சந்தேகம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

குடும்ப தகராறு காரணமாக மனைவியை கட்டுத்துவக்கால் சுட்டுக் கொலைசெய்து விட்டு கணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று நுவரெலியா டோப்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா, டொப்பாஸ் பகுதியைச் சேர்ந்த என்டன் தாஸ் (வயது 32) மற்றும் நாதன் ரீட்டா (வயது 29) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வீடொன்றில் சடலமாக கிடப்பதாக நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சடலங்கள் கிடந்த இடத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கொன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கணவன், மனைவிக்கிடையிலான குடும்ப தகராறே சம்பவத்துக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு திருமணமாகி, எட்டு மாதங்களேயான நிலையில், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் கணவன் மனைவியை சுட்டு கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகின்றனர்.

உயிரிழந்த என்டன் தாஸின் தாயார் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தின் மூலம் இது தெரியவருகின்றது.

நான் எனது மகன், மருமகளுடனேயே வசித்துவருகின்றேன். கணவன், மனைவி இருவருக்கிடையிலும் அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படுவதுண்டு.

அன்று திங்கட்கிழமை இரவும் வழமை போல எனது மகனுக்கும் மருமகளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. நான் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன். சமையல் அறையில் பாரிய வெடிப்பு சத்தம் கேட்டது. நான் சமையல் அறைக்குள் சென்று பார்த்தபோது மருமகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் மகனிடன் ஏன்? என கேட்டப்போது மின்சாரம் தாக்கி கீழே வீழ்ந்துவிட்டார். யாரையாவது உதவிக்கு அழைக்குமாறு கூறினார். நான் அயலவர்களை கூப்பிடுவதற்காக வீட்டிலிருந்து வெளியே வரும்போது மீண்டும் ஒரு வெடிப்பு சத்தம் கேட்டது. நான் மீண்டும் வீட்டுக்குள் ஓடிச் சென்று பார்த்த போது மகனும் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக அவர் தெரிவித்தார். நீதவான் விசாரணைக்கு பின்னர் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.




# மலையக நட்சத்திர கலை பேரவை கலைஞர்கள் சந்திப்பு

(புசல்லாவ தினகரன் நிருபர்)



மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் கலைஞர்கள் சந்திப்பு புசல்லாவை இந்து தேசிய கல்லூரி தலைவர் மலையக வாசுதேவன் தலைமையில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது பேரவையின் இவ்வாண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

நடப்பாண்டுக்கான நிர்வாகக் குழுத் தெரிவும் நடைபெற்றது. மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் தலைவராக மலையக வாசுதேவனும் செயலாளராக ஆறுமுகம் சந்திரமோகனும் பொருளாளராக முப்புளி மகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவராக சந்தனம் சத்தியநாதன், உப செயலாளராக மாரிமுத்து யோகேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு ஏனைய பல்வேறு துறை சார்ந்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சிறையிலிருந்து தப்பிச் சென்ற கைதி

# பொலிஸாரால் மடக்கிபிடிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டி அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற கைதியொருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுதுவெல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், மதுகம பிரதேசத்தில் வைத்து நேற்று (8) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீடுகளை உடைத்து கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இவர் சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து கைதி தொடர்பான தகவல்களை ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பியதையடுத்து மதுகம பிரதேசத்தில் மறைந்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சிறைக்கைதியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ரதல்ல குறுக்கு வீதியை பொது போக்குவரத்துக்கு திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

(ஹற்றன் விசேட நிருபர்)



நானுஓயா ரதல்ல குறுக்கு வீதி தடையை நீக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதிக்கான குறுக்குவழி பாதையாக நானுஓயா ரதல்ல குறுக்கு வீதி விளங்குகின்றது. எனினும் கடந்த சில வருடங்களாக இப்பாதையில் பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற பஸ் ஒன்று இப்பகுதியில் வானுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வேனில் பயணித்த ஆறு பேரும் முச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவரும் உயிரிழந்ததுடன் 53 மாணவர்கள் காயமடைந்தனர்.

அதனை தொடர்ந்து நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டது.

இதனால் கார்லிபெக் தம்பகஸ்தலாவ, லேன்டெல், சமர்செட், வங்கிஓயா, ரதல்ல உள்ளிட்ட தோட்டங்களில் சுமார் 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.08.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5199
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,764,304.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 8 7 5 7 7 6

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
சீட்டிழுப்பு திகதி 2023-08-07
508
ரூ.4,344,470.60
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 23 37 55
விசேட இலக்கினம் சிம்மம்

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3441
சீட்டிழுப்பு திகதி 2023.08.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,687,786.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 11 32 64 71
விசேட எழுத்து V
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12183

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1547
07/08/2023
56174
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,480,636.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 09 32 33 65

தன நிதானய
திகதி 2023/08/07
சீட்டிழுப்பு இலக்கம் 1229
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,706,591.20
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 30 50 52 62
விஷேசட ஆங்கில எழுத்து E
Double Chance இலக்கம் 37786

லக்கி 7 Lucky
திகதி 07.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0025
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 8 5 0 4 3 1
L7 இலக்கம் 2 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,659,292.32


# கடும் வரட்சியால் மகாவலி கங்கையின் நீர்மட்டம் குறைவு

## குடிநீரின்றி தவிக்கும் மக்கள்



நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர்த்தேக்கங்கள், ஆறுகள், நீரோடைகள் வரண்டு காணப்படுவதுடன், இலட்சக்கணக்கான மக்கள் கடும் குடிநீர் தட்டுப்பாட்டைச் சந்தித்து வருகின்றனர்.

கடும் வரட்சியால் இலங்கையின் மிக நீளமான நதியான மகாவலி கங்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

335 கிலோமீற்றர் தூரம் ஓடும் மகாவலி கங்கையால் பலரும் நன்மையடைகின்றனர்.

மகாவலி ஆறு வறண்டு கிடப்பதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்களுக்கு நீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர் பிரச்சினையையும் எதிர்கொண்டுள்ளனர்.

கண்டி, தன்னேகும்புர பாலத்திற்கு அருகில் ஓடும் மகாவலி கங்கையின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளமையை படத்தில் காணலாம்.

# பிள்ளைகளுக்கு நீச்சல் பயிற்சியளித்த தந்தை நீரில் மூழ்கி பரிதாப மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



பலாங்கொடை பின்னவல பிரதேசத்தில் தனது பிள்ளைகளுக்கு ஆற்றில் நீச்சல் பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்த தந்தையொருவர் நேற்று (8) நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வளவை ஆற்றின் பல்லேவெல பகுதியிலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் வசந்த சரத் கமகே என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் ஆற்றில் குளிக்கச் சென்ற இவர் அவர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியுள்ளார். பிள்ளைகளின் அழுகை சத்தத்துடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த ஏனையவர்கள் ஓடி வந்து பாதிக்கப்பட்டவரை வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்ல முயற்சித்த போதும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

# கிழக்கின் குரல்



# வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகம்

## அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் வழங்குவதற்கு 21 இலட்சத்து 88 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின், அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரமவின் ஆலோசனைக்கமைய வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை, மகாஓயா, லகுகல, திருக்கோவில், ஆலையடிவேம்பு, பதியத்தலாவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் ஊடாக தொடர்ச்சியாக குடிநீர் பவுசர் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும், மேலும் தேவைப்படும் பட்சத்தில் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தெரிவித்தார்.

வரட்சியினால் கால்நடைகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்ப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, சம்மந்தப்பட்ட பிரதேச கால்நடை வைத்தியதிகாரிகள் தகவல்களை வழங்கும் பட்சத்தில் கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் தொகைக்கேற்ப பிரதேச செயலாளர்களின் கோரிக்கைக்கமைய நிதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறினார்.

மகாஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 649 குடும்பங்களைச் சேர்ந்த 02 ஆயிரத்தி 192 பேர் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலயத்தில் கல்விகற்கும் வறிய மாணவர்களின் நலன் கருதி, ஒரு தொகுதி நூல்கள் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனால் வழங்கப்பட்டது. அதிபர் ஜீ.எம்.இர்ஷாத் அதனை பெறுவதையும், சம்பிரதாய பூர்வமாக மாணவனொருவனுக்கு வழங்கிவைப்பதையும் படத்தில் காணலாம்.

படம்;நற்பிட்டிமுனை தினகரன்,கல்முனை குறூப் நிருபர்கள்

# தாய்மார்களை விழிப்பூட்ட போஷாக்கு உணவுக் கண்காட்சி



(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட நடுத்தீவில் அமைந்துள்ள குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் போஷாக்கு உணவுக் கண்காட்சி நடைபெற்றது. குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜித் தலைமையில் (05) நடைபெற்ற இந்நிகழ்வில், காக்காமுனை, நடுத்தீவு, குறிஞ்சாக்கேணி மற்றும் முனைச்சேனை பகுதிகளில் உள்ள தாய்மார்கள் பங்கேற்று, போஷாக்கு உணவு தொடர்பான விழிப்புணர்வையும் பெற்றுக் கொண்டனர்.

இதில் பங்கேற்ற குறிஞ்சாக்கேணி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.அஜித் இந் நிகழ்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், கிண்ணியா பிரதேச செயலக பிரிவிற்குள் இரண்டு பொது சுகாதார வைத்திய பணிமனைகள் சிறப்பாக இயங்குகின்றன.

கிண்ணியா பொது சுகாதார பணிமனை,குறிஞ்சாக்கேணி பொது சுகாதார பணிமனை பொதுமக்களின் சுகாதாரத்தை மேப்படுத்த பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. இதில் ஒரு வேலைத்திட்டமாக போஷாக்கான உணவு தொடர்பில் தாய்மார்காளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இக்கண்காட்சி நடாத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மரக்கறி செய்கையாளர்கள் பாதிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

பருவ கால மழை உரிய காலத்திற்கு பெய்யாத நிலையில், உள்ளூர் மரக்கறி உற்பத்தி செய்கையில் ஈடுபடும் பெருமளவிலான மூதூர் பிரதேச மரக்கறி செய்கையாளர்கள் , பயிர்ச் செய்கையை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பருவகால மழை மற்றும் தோட்டக் கிணறுகள் மூலமும் காலாண்டு இடைக்கால பயிரினமாக இராசவள்ளி, மரவள்ளி, நிலக்கடலை, வத்தாளை உள்ளிட்டவைகளுடன் பல்லின மரக்கறி பயிர்ச் செய்கையினையும் மூதூர், சம்பூர், இறால்குழி மற்றும் வேதத்தீவு தோட்டக்காணிகளில் செய்கை பண்ணுவது வழக்கம்.

இந் நிலையில் பருவ கால மழை தற்போது பெய்யாததினாலும் தோட்டக் கிணறுகளில் நீர்வற்றி காணப்படுவதாலும் உரிய காலத்திற்கான இப் பயிரினங்களை இதுவரை உற்பத்தி செய்யவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

# நாட்டை கட்டியெழுப்ப அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டும்

### ஐ.தே. க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார

(அட்டாளைச்சேனை தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்)

பொருளாதார பின்னடைவினால் வீழ்ந்திருக்கும் நாட்டை துரித கதியில் கட்டியெழுப்ப வேண்டுமானால் மக்கள் அனைவரும் பேதங்கள் மறந்து ஒற்றுமைப்பட வேண்டும். இந் நிலைப் பாட்டினையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொண்டிருக்கின்றார்.

அவரது தூர நோக்கு மிக்க செயற்பாட்டினாலேயே நாடு தற்போது வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான பிரதான காரியாலயத் திறப்பு விழா மற்றும் பொத்துவில் தொகுதி ஆதரவாளர்கள் மத்தியில் ஒழுங்கு செய்யப்பட்ட விஷேட சந்



திப்பு ஆகியன ஞாயிற்றுக்கிழமை (06) அட்டாளைச்சேனையில் இடம்பெற்றபோதே அவர் இக்கருத்தினைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வின்போது, தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை கையேற்க யாருமற்றிருந்த வேளையில், ஆட்சிப் பொறுப்பினை பாரமெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்ட ஒரு வருட காலத்தினுள் நம் நாட்டினை மீட்டெடுத்த பெருமையினை உலகத் தலைவர்கள் பிரஸ்தாபித்து வருகின்றனர் என்றார்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் நகர சபை ஊழியர்கள் விருது வழங்கி கௌரவிப்பு



ஏறாவூர் சுழற்சி,மண்டூர் தினகரன், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

ஏறாவூர் நகர சபையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஊழியர்களை பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு, ஏறாவூர் வாவிக்கரை பூங்காவில் நடைபெற்றது.

ஏறாவூர் நகர சபையின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வுடன், சேர்ந்ததாக ஒழுங்கு செய்யப்பட்ட இக் கௌரவிப்பு நிகழ்வானது ஞாயிற்றுக் கிழமை (06) ஏறாவூர் நகர சபையின் விசேட ஆணையாளரும் சபையின் செயலாளருமான எம். எச்.எம். ஹமீம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரிவில் நீண்ட நாட்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் மட்டுமல்லாது, நகர சபையின் வேலைப் பிரிவிலும் சிறப்பாக கடமையாற்றுகின்ற சுமார் 78 ஊழியர்கள் அதிதிகளால் பாராட்டப்பட்டு விருது வழங்கி கொளரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜூத், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர். சியாஹுல் ஹக், நகர சபை கணக்காளர் திருமதி புஸ்ரா நுஸைர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

நாட்டில் பல்வேறு சமய சமூக சேவைகளை ஆற்றி வருகின்ற ஒரு நிறுவனம் *Spend* நிறுவனம், இந் நிறுவனமானது இன்று 09ஆம் திகதி காலை 7 மணி முதல் 11 மணி வரை பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் மொழிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது. இக் கருத்தரங்கை தேசிய மொழி கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அரச கரும மொழிகளான தமிழ், சிங்கள மொழிகளை கற்பித்து வருகின்ற, திருமதி ரவீந்திரன் சந்திர குமாரி வளவாளராக நடத்தவுள்ளார்.

# தொழில் நுட்ப கல்லூரியில் நெல் அறுவடை விழா

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியின் விவசாய கற்கைப் பிரிவினரால், கல்லூரி வளாகத்தில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை விழா, கல்லூரியின் பதில் அதிபர் எம்.எம்.ஹசன் தலைமையில், கல்லூரியின் பதிவாளர் எம். ஏ.சி.எம்.றகீபின் பிரசன்னத்துடன் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எம்.சித்தி பாத்திமா கலந்து கொண்டு நெல் அறுவடையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கல்லூரியின் வர்த்தகப் பிரிவுத்தலைவர் எம்.எஸ்.எம்.றாபி, தகவல், தொழில் நுட்ப போதனாசிரியர் எம். பி.எம்.சிராஜ், விவசாய கற்கை நெறி போதனாசிரியர் எம்.ஐ.எம்.நசீர், விவசாயத் திணைக்களத்தின் ஓய்வு நிலை பணிப்பாளர் வை.பி. இக்பால் ஆகியோர் கலந்து கொண்டு நெல் அறுவடையை மேற்கொண்டனர்.



விவசாய கற்கை நெறியின் விடுகை மாணவ, மாணவிகளும், புதிய மாணவ,மாணவிகளும், கலந்து கொண்டு அறுவடையை மேற்கொண்டதுடன், மாணவர்களால் விவசாயப் பாட நெறி தொடர்பாக விளக்கங்களும் இங்கு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விசர் நாய் கடித்து நால்வர் காயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

புதிய காத்தான்குடி அப்ரார் பிரதேசத்தில் திங்கட்கிழமை (07) விசர் நாய் கடித்ததில் நான்கு பேர் காயமடைந்து , மூன்று பேர் காத்தான்குடி தள வைத்தியசாலையிலும் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய காத்தான்குடியில் வீடொன்றில் வளர்த்து வரும் விஷர் நாயொன்று இவ்வாறு கடித்துள்ளது. இதையடுத்து குறித்த நாயினால் இப் பகுதியில் வசிப்பவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் காத்தான்குடி நகர சபை மற்றும் சுகாதார அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். புதிய காத்தான்குடி அன்வர் மற்றும் அப்றார் பகுதிகளில் விசர் நாய் ஒன்றினால் அப்பகுதியில் அச்சம் ஏற்பட்டுள்ளது எனவும் ,பிரதேச சுகாதார பணிமனை அதிகாரிகளும், நகர சபையும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

## வரட்சியால் நீர் தேடி அலையும் கால்நடைகள்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றியுள்ளன. இதன் காரணமாக கால் நடைகள் குடி நீர் தேடி அலைந்து திரிவதை காணக்கூடியதாக உள்ளது. கடந்த சில மாதங்களாக கிழக்கில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதனால் இங்குள்ள பல நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளதுடன், சிலவற்றில் நீர்வற்றிப் போயுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். ஆடு, மாடுகள் மேய்வதற்கான மேய்ச்சல் நிலம் வரட்சியால் வரண்டு போயுள்ளது. சிறிய நீர்த்தேக்கங்கள் வற்றியுள்ளன. இதனால் கால் நடைகள் அங்கும் இங்கும் நீர், உணவு தேடி பரிதாபமாக அலைந்து திரிகின்றன.

பண்ணையாளர்கள் பால் உற்பத்தியிலும் வீழ்ச்சியை சந்தித்து வருவதாகவும், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# சமாதான நீதவானாக நியமனம்



சாய்ந்தமருதை சேர்ந்த சிரேஷ்ட உலமா அப்துல் மஜீத் அப்துல் ஜப்பார் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இவர் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சாய்ந்தமருதின் மத்தியஸ்தசபை ஸ்தாபக உறுப்பினரான இவர், பிரபல சமூக சேவையாளராகவும் திகழ்கிறார்.

சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலம் சுனாமிக்குப் பின்னர் மீளெழுச்சி பெற பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளராக மற்றும் உறுப்பினராக இருந்து செயற்பட்டவர் என்பதோடு, சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயத்தை ஸ்தாபிப்பதிலும் முன்னின்று உழைத்த ஒருவராவார்.

இவர் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் சாய்ந்தமருது கிளை நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்து வருகிறார்.

காசோலை மோசடிகள் அதிகரிப்பு

# உள்ளூர் உற்பத்தியாளர்களை விழிப்பாக இருக்க யாழ். பொலிஸார் அறிவுறுத்தல்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் வெளிமாவட்ட வியாபாரிகள் காசோலை மோசடியில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் ஆகையால், இது தொடர்பாக உள்ளூர் உற்பத்தியாளர்களை விழிப்புணர்வுடன் இருக்குமாறும், யாழ். பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 7 மாதங்களில் 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான காசோலை மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக



21 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 6 மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள உற்பத்தியாளர்களை நாடி வரும் வெளிமாவட்ட வியாபாரிகள், அவர்களின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து விட்டு, பணத்துக்கு பதிலாக பிற்திகதியிடப்பட்ட காசோலையை வழங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு காசோலையை பெற்றுக்கொண்ட உள்ளூர் உற்பத்தியாளர்கள், குறிப்பிட்ட திகதியில் வங்கியில் காசோலையை மாற்ற முற்படும் போது, வெளிமாவட்ட வியாபாரிகளின் வங்கிக் கணக்கில் பணம் இல்லாமையால் காசோலைகள் திரும்புகின்றன.

இதன் பின்னர், தாம் ஏமாற்றப்பட்ட விடயம் தெரிந்து பொலிஸ் நிலையங்களில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் முறைப்பாடு செய்வதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, 10 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்ய முடியுமெனத் தெரிவித்த பொலிஸார், 10 இலட்சம் ரூபாவுக்கும் குறைவான மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# வடக்கின் உதயம்

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் பலி

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**




யாழ்ப்பாணத்தின் துன்னாலை மத்தி, கரவெட்டி பிரதேசத்தில் மதிலுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர், கடந்த முதலாம் திகதி மோட்டார் சைக்கிள் பழகிய போது, மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில், தலைக்கவசம் அணியாததால், தலையில் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துன்னாலை மத்தி, கோயில்கடவை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய சங்கர் சஞ்சீவன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோதமாக

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 32 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றால் அபராதம் விதிப்பு

**நாகர்கோவில் விசேட நிருபர்**

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 32 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து, தலா ஒரு இலட்சம் ரூபா படி இவர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை அபராதம் விதித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் செல்ல முற்பட்ட 55 பேரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்து, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) முன்னெடுக்கப்பட்ட போது, இவர்களில் 32 பேர் நீதிமன்றத்தில் முன்னிலையாகிய போதே, இந்த அபராதத்தை நீதவான் விதித்துள்ளார்.

இந்த அபராதத்தொகையை இன்றையதினத்துக்குள் (09) செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, ஏனைய 23 பேர் வழக்குக்கு முன்னிலையாகாமல் இருந்தமையால், 192ஆம் பிரிவின் கீழ் ஆளில்லா ஒருமுக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 7ஆம் திகதி இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

## தமிழ்த் தேசியம் எமது இலக்கானால் அபிவிருத்தி அதற்கு வலுச்சேர்க்கும்

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

தமிழ்த் தேசியம் தமது இலக்கானால் அபிவிருத்தி அதற்கு வலுச்சேர்க்கும் கருவியாக அமையுமென, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் (07) நடைபெற்ற 'தமிழருவி' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"அபிவிருத்தி அரசியலை தேர்வு செய்தவர் துரோகியும் அல்ல. தமிழ்த் தேசியத்தை தேர்ந்தெடுத்த அரசியல்வாதி அபிவிருத்தியை கைவிட வேண்டுமென்பதும் அல்ல. தமிழ்த் தேசியம் எமது இலக்கானால், அதை வலுப்படுத்தும் கருவியாக அபிவிருத்தி அமையுமென்று நம்புகிறேன்.



அடிப்படை தேவைகளை பெற்று முன்னேற்றமாக வாழ வேண்டுமெனவும் அதனூடாக தமிழ்த் தேசியத்தை பெற வேண்டுமென்பதே மக்களின் கனவு. அந்தக் கனவில் புலம்பெயர்வு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எமது மாவட்டத்தில் சனத்தொகை பாரியளவில் குறைந்து செல்கிறது. அதனால் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கூட குறைந்துள்ளது.

பாரிய இழப்புகள், போராட்டங்களை தாண்டி பெறப்போகின்ற தேசியத் தீர்வு மக்களுக்கானதா? அல்லது மண்ணுக்கானது மாத்திரமா?

மக்களுக்கானதாயின், அந்த உரிமையை அனுபவிக்க இந்த மண்ணில் மக்கள் இருக்க வேண்டாமா?

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அபிவிருத்தியை கைவிட்டு தேசியம் மட்டுமே தீர்வெனும் அடிப்படையில் நகர்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது.

அரசியல், ஆயுதப் போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைக்கு ஆதரவு வழங்கிய மக்கள், கடந்த பாராளுமன்ற தேர்தலில் அபிவிருத்தியுடன் இணைந்த போராட்டத்துக்கும் ஆதரவளித்துள்ளனர்" என்றார்.

## யாழ். நகரில் பஸ்ஸுக்கு கல் வீசிய பெண் கைது!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நகரில் பஸ் வண்டியொன்றுக்கு கல் வீசி சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை (08) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகருக்கும் அச்சுவேலி பிரதேசத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் வண்டியொன்றின் மீதே இப்பெண் கல் வீச்சை நடத்தியதாகவும் இப்பஸ் வண்டி, யாழ். நகரில் தரித்து நின்ற போது, அப்பஸ் வண்டிக்கு இப்பெண் கல் வீச்சை நடத்தி பஸ் வண்டியை சேதப்படுத்தியதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அப்பெண்ணை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கஞ்சாவுடன் கைதான இருவரை

## பொலிஸில் தடுத்துவைத்து விசாரிக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் அனுமதி

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

யாழ்ப்பாணத்தின் வெவ்வேறிடங்களில் கஞ்சாவுடன் கைதான இருவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பொலிஸில் தடுத்து வைத்து விசாரணை நடத்த மல்லாகம் நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பொன்னாலையில் கடந்த சனிக்கிழமை (05) இரவு 227 கிலோ 915 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர், இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, காங்கேசன்துறை கடற்பரப்பில் 54 கிலோ 300 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில், பொன்னாலையில் கைதான சந்தேகநபரை 7 நாட்களுக்கும் காங்கேசன்துறையில் கைதான சந்தேகநபரை 3 நாட்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்துவைத்து விரிவான விசாரணையை முன்னெடுக்க நீதிமன்றத்தில் பொலிஸார் அனுமதி கோரிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் கஞ்சாவுடன் கைதாகிய சந்தேகநபர்களை பொலிஸார் விசாரணை நடத்தி, 24 மணிநேரத்துக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தி விடுவார்கள். இந்நிலையில், இச்சந்தேகநபர்களிடம் விரிவான விசாரணையை நடத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் 24 மணிநேரம் கடந்தும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த பொலிஸார் இந்த அனுமதியை பெற்றுள்ளனர்.

இதேவேளை, பெருந்தொகை கஞ்சா கடத்தலை முறியடித்து பாரிய குற்றச்செயலை தடுத்து நிறுத்திய பொன்னாலை இளைஞர்களுக்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் ஹேரத் பண்டார பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் நகைகளை திருடிய 6 பேர் கைது

கார் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் தங்கநகைகளை திருடிய சம்பவங்கள் தொடர்பாக 6 சந்தேகநபர்களை கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து காரொன்றையும் 2 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதாக, நெளுக்குளம் பொலிஸார் நேற்று (08) தெரிவித்தனர்.

நெளுக்குளம், பம்பைமடு, வேப்பங்குளம் பிரதேசங்களில் தங்கநகைகளை பறிகொடுத்தவர்கள், நெளுக்குளம் மற்றும் பறயனாலங்குளம் பொலிஸாரிடம் கடந்த 6 மாதங்களாக முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர்.



இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், தம்பனையைச் சேர்ந்த 2 பேரையும் பெரியதம்பனையைச் சேர்ந்த 2 பேரையும் குட்செட் வீதியைச் சேர்ந்த ஒருவரையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

## சாவகச்சேரியில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

**யாழ். விசேட நிருபர்**

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரியின் வீட்டின் மீது ஆறு பேரைக் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கருகம்பனை பிரதேசத்திலுள்ள இந்த அதிகாரியின் வீட்டுக்கு மூன்று மோட்டார் சைக்கிள்களில் சென்ற இந்தக் குழுவினர், வீட்டுக் கதவை கொத்தி உடைக்க முற்பட்டதுடன், ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

அத்துடன், வீட்டு ஜன்னல் வழியாக பெற்றோல் குண்டை வீசிவிட்டு இந்தக் குழுவினர் தப்பிச் சென்றமை விசாரணையில் தெரிய வந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணம், வெள்ளாந்தெரு பகுதியில் வசிக்கும் கஷ்டப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. கனடா மெட்ரோலான் மீடியா நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியரின் மகள் ரோகினியின் பிறந்ததினத்தையிட்டு இந்த உலருணவுகள் வழங்கப்பட்டன. யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் கலாநிதி நா.தனேந்திரன் கிராம அலுவலர் காரியாலயத்தில் இவற்றை வழங்கினார்.

## 19 வயது யுவதியின் காதலரான குடும்பஸ்தர் அடித்துக் கொலை!

யாழ்ப்பாணத்தில் 6 பேர் கைது!

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 19 வயதுக் காதலியுடன் சென்ற 54 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர், ஊரவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 6 சந்தேகநபர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சங்குவேலி பிரதேசத்தைச் சேர்ந்த மரியதாஸ் ஜெகதாஸ் என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இவர்கள் இருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமது ஊரை விட்டு வெளியேறி வேறிடத்தில் இருந்துள்ளனர். இந்நிலையில், இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைப்பதாக உறவினர்கள் தெரிவித்ததால், இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் ஊர் திரும்பியுள்ளனர்.

இதன்போது, இவர்கள் இருவர் மீதும் ஊரவர்கள் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் மயக்கமடைந்த குடும்பஸ்தர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக, சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அப்பெண்ணும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நபர் கைது

ஐயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரதன்குளம் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி டிரக்டர் வண்டியொன்றில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவரை மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) மாலை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை நடத்தி 19 வயதுடைய இச்சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைக்காக இச்சந்தேகநபரை ஐயன்குளம் பொலிஸாரிடம் மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## வாகன கொள்வனவின்போது காசோலை மோசடியில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

**யாழ்.விசேட நிருபர்**

வாகனமொன்றை கொள்வனவு செய்துவிட்டு, காசோலை மோசடியில் ஈடுபட்ட ஒருவரை 14 நாட்கள்வரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், இளவாலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் 62 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனமொன்றை இச்சந்தேகநபர் கொள்வனவு செய்துவிட்டு, போலி காசோலை வழங்கி ஏமாற்றியுள்ளார்.

வாகனத்தை விற்பனை செய்தவரும் காசோலையை பெற்றுக்கொண்டு, வங்கியில் மாற்றக் கொண்டு சென்ற போது, வங்கிக் கணக்கில் பணம் இல்லாமல் காசோலை திரும்பியது.

இதற்கிடையில், வாகனத்தை கொள்வனவு செய்தவர் வாகனத்துடன் தலைமறைவாகிய நிலையில், யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவில் வாகனத்தை விற்பனை செய்தவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே, விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் முன்னெடுத்த விசாரணையின் போது, கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மாவிட்டபுரத்தில் மின்னொழுக்கினால் தீக்கிரையாகியுள்ளதாக தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆரோக்கியமான சமுதாயத்துக்கு கலையம்சமும் அவசியமாகும்

அரசியல், சமூக செயற்பாட்டாளர் அருந்தவபாலன்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப பிள்ளைகளுக்கு கல்வியுடன் கலையம்சமும் அவசியமென, ஓய்வுநிலை அதிபரும் அரசியல், சமூக செயற்பாட்டாளருமான க.அருந்தவபாலன் தெரிவித்தார்.

அண்மையில் மீசாலை ஜானு ஓவியகூடத்தின் கலைக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"பிள்ளைகள் கலை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும் போது, அவர்களுடைய மனப்பாங்கு செம்மைப்படும். இதனூடாக தமது வாழ்வை தாமே சிறப்புற அமைத்துக்கொள்வதற்கான திறனை அவர்கள் வளர்த்துக்கொள்ள முடியும் என்றார்.

# இந்திய ரயில்வே வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பம்




உலகெங்கும் ரயில்வே துறைகளில் அவ்வப்போது புதிய திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. காலத்திற்கு ஏற்ப அதன் வசதிகளையும் தொழில்நுட்பங்களையும் மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. அவ்வாறான பாரிய திட்டமொன்றுதான் இந்தியாவில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 1999 முதல் 2008 வரை 'மாதிரி நிலையத் திட்டம்' என்ற திட்டத்தை இந்திய ரயில்வே தொடங்கியது. அந்தத் திட்டத்தின் மூலம் இந்திய ரயில்வே 594 ரயில் நிலையங்களை மேம்படுத்தியது. இவற்றில் அதிக எண்ணிக்கையாக 34 ரயில் நிலையங்கள் மத்தியப் பிரதேசத்தில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டன.

அதேபோல சமீபத்தில் இந்திய மத்திய அரசு 'அம்ரித் பாரத் ஸ்டேஷன்' திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டம் நீண்டகால அணுகுமுறையுடன் தொடர்ச்சியான அடிப்படையில் நிலையங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரயில் நிலைய அணுகல், சுற்றும் பகுதிகள், காத்திருப்புக் கூடங்கள், கழிப்பறைகள், லிப்ட், எஸ்கலேட்டர்கள், தூய்மை, இலவச வைஃபை போன்ற வசதிகளை மேம்படுத்துவதற்காக கட்டம் கட்டமாக பாரிய திட்டங்களை ரயில்வேத்துறை வகுத்துள்ளது.

அமிர்த பாரத் நிலையத் திட்டத்திற்காக இந்தியா எங்கும் 1309 ரயில் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை 73 ரயில் நிலையங்கள் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன . அரக்கோணம், செங்கல்பட்டு, கோவை, எரோடே ஜங்ஷன், ஜோலார்பேட்டை, கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகர்கோவில், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், விழுப்புரம், போன்ற முக்கிய சந்தி ரயில் நிலையங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இந்திய ரயில்வே வரலாற்றின் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக இத்திட்டம் பாராட்டப்படுகின்றது. நாடு முழுவதும் 1309 நிலையங்களை மறுசீரமைக்க அமிர்த பாரத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக, முதற்கட்டமாக நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்கள் மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்கு கடந்த 6 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டியுள்ளார்.

வளர்ச்சி இலக்கை நோக்கி இந்தியா சென்று கொண்டிருக்கிறது. இந்திய ரயில்வே வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் இன்று தொடங்குகிறது" என பிரதமர் மோடி தெரிவித்தார்.



முதற்கட்டமாக 508 அமிர்த பாரத் நிலையங்களின் மறுசீரமைப்புக்காக சுமார் 25,000 கோடி செலவிடப்படவுள்ளது. ரயில்வே உள்கட்டமைப்பானது மிக முக்கியமாக இந்தியாவின் சாதாரண மக்களுக்கு பெரிய உந்துதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி ஒட்டுமொத்த உலகத்தின் கவனமும் இந்தியா மீது திரும்பியுள்ளது. உலக அளவில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளது என்றும் கூறலாம்.

## 'அம்ரித் பாரத் ஸ்டேஷன்' திட்டத்தின் கீழ் 1309 ரயில் நிலையங்கள் நவீனமயமாகும்

மேலும், நவீன ரயில் நிலையங்கள் சுற்றுலா மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரயில்வே பயணத்தை அணுகக்கூடியதாக மட்டுமல்லாமல், சுவாரஸ்யமாகவும் மாற்றுவதே இந்திய அரசின் குறிக்கோளாக உள்ளது. ஒவ்வொரு 'அமிர்த பாரத் நிலையமும்' நகரத்தின் நவீன அபிலாஷைகள், பண்டைய இந்திய பாரம்பரியத்தின் சின்னமாக மாறும் என்று நம்பப்படுகின்றது.

அத்துடன் தொலைநோக்குப் பார்வையுடன் ரயில் நிலையங்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு இத்திட்டம் வகைசெய்யும். குறைந்தபட்ச அத்தியாவசிய வசதிகளை கருத்தில் கொண்டு ரயில் நிலையங்களின் மேல்தளத்தில் அங்காடிகள், வணிக நிறுவனங்கள் அமைக்கப்படும். ரயில் நிலையங்களில் ஏற்கனவே உள்ள வசதிகளுக்கு மாற்றாக மேம்பாடும் மற்றும் புதிய வசதிகளை அறிமுகப்படுத்துதலை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டதாகும்.

தகவல் பலகைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் ஆகியவை ரயில் நிலையங்களில் உறுதி செய்யப்படும். பயணிகள் தங்கும் அறை, நடைமேடைகள், ஓய்வு அறைகள், அதிகாரிகள் ஆய்வு அறை ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

ஒவ்வொரு ரயில் நிலையமும் சிட்டி சென்ட்டர் போல மேம்படுத்தப்படும் என்றும், ரயில் நிலையத்தின் கட்டடம் தரம் உயர்த்தப்படும் என்றும், வணிக மண்டலம், உணவகம், சிறுவர்களுக்கான விளையாட்டு இட வசதிகள் ஆகியவை இந்த மறுசீரமைப்பு ரயில் நிலையங்களில் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயணிகளின் வசதிக்காக தனித்தனி நுழைவு மற்றும் வெளியேறும் வாயில், பல அடுக்கு வாகன நிறுத்தமிடம், மின்னுயர்த்தி, நகரும் படிக்கட்டுகள்,மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். ஒருங்கிணைக்கப்பட்ட பலதரப்பட்ட இணைப்பால் மறுசீரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் சமூக பொருளாதார செயல்பாடுகளின் மையமாக அமையும் என்றும் மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# இ.கி.மிஷன் சுவாமி நீலமாதவானந்தா ஜீயின் 'இந்து மதம் ஒரு பார்வை' நூல் வெளியீடு

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளரும் எழுத்தாளருமான ஶ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் எழுதிய 'இந்து மதம் ஒரு பார்வை' என்ற நூல் வெளியீட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு, சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையை முன்னிட்டு 125 ஆண்டுகள் பூர்த்தியை கொண்டாடும் முகமாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

உலகளாவிய இராமகிருஷ்ணமடம் மற்றும் இராமகிருஷ்ணமிஷனின் துணைத் தலைவரும் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான அதிவண. ஶ்ரீமத் சுவாமி கௌதமானந்த ஜீ மகராஜ் அவர்களால் அந்நூல்வெளியிட்டு வைக்கப்பட்டது .





இந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு முன்னாள் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு உபதலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ் மற்றும் துணை பொது தலைவரின் செயலாளர் சுவாமி யாதவேந்ரானந்தஜி, சுவாமி சுரார்சிதானந்தஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இ.கி.மிசன் வெளியிட்டு வரும் இராமகிருஷ்ண விஜயத்தில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ 'அறிந்து கொள்வோம் சனாதன தர்மத்தை' என்ற தலைப்பில் தொடராக எழுதிவந்த ஆன்மீக கட்டுரைகள் 37 இந்த நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் சென்னை மயிலாப்பூர் ஶ்ரீ இராமகிருஷ்ண மடம் வெளியிட்ட இந்த நூல் இந்து மதத்தின் பல்வேறு சாஸ்திரங்களையும் பல்வேறு பிரிவுகளையும் ஆராய்கிறது.

37 கட்டுரைகளையும் 10 உப இணைப்புகளையும் கொண்ட இந்த நூல் ஆசிரியர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மேயர் தி. சரவணபவன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாநிதி பத்மராஜா ,கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராஜா மற்றும் வர்த்தக பிரமுகர்கள், அரசு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷனுடன் நூறாண்டுகளாக பயணிக்கும் 26 நிறுவனங்களுக்கு பாராட்டுப் பத்திரமும் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை, எழுத்தாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் தொடர்பாக நீண்ட ஒரு ஆவணப் பெட்டகத்தை தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# இனமத பேதம் கடந்து சிறப்புடன் நடந்தேறிய கல்முனை வலய தமிழ்மொழித்தின போட்டிகள்



கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் மற்றும் தமிழ்த்துறையினரின் வழிகாட்டலுக்கமைய இம்மாகாணத்தில் தமிழ்மொழித் தினப் போட்டிகளும் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை தமிழ்க் கோட்டம், கல்முனைக் கோட்டம் ஆகிய ஐந்து கோட்டங்களைச் சேர்ந்த 65 பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய கல்முனை தமிழ்மொழித் தினப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வும் அரங்கப் போட்டிகளும் கடந்த வாரம் சிறப்பான முறையில் நடைபெற்றன.

தேசியக் கொடியுடன், வலயக் கொடி மற்றும் ஐந்து கோட்டங்களின் கொடிகளும் ஏற்றப்பட்டு நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டியாக இது கொள்ளப்படுகிறது. கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மாணவிகளின் அழைத்துவரல் நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கல்முனை வலய தமிழ்மொழித் தினக் குழுவின்ஆலோசகரும் தமிழ்மொழிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல். றியாலின் தொடங்கலுரையுடன் நடைபெற்ற ஆரம்ப நிகழ்விற்கு கல்முனை வலய தமிழ்மொழிக் குழுவின் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமான எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை வலய தமிழ்மொழிக் குழுவின் இணைப்பாளரும் தமிழ்மொழிக்கான வளவாளருமான க. குணசேகரம், தமிழ்மொழிக் குழுவின் செயலாளரும் வளவாளருமான ஜெஸ்மி மூஸா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ்.கலையரசன், ஐ.ஓ.எம்.திட்டத்தின் சூடான் நாட்டுக்கான பிரதிநிதி றினாஸ் செய்னுலாப்தீன் ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், துறைசார் கலைஞர்கள் முதலியோரின் பங்கேற்புடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாரம்பரிய தமிழ்ப் பண்பாட்டுகளுடன் மலர்மாலை அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்மொழி, தமிழ்த்தின வாழ்த்து என்பன கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மாணவிகளாலும் ஆசிரியைகளாலும் நடன அரங்கேற்றத்துடன் இடம்பெற்றன.

தமிழ்மொழித் தினத்திற்குக் கால்கோளாக அமைந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் உருவச்சிலையின் காட்சிப்படுத்தலுடன் நிகழ்வுகள் அரம்பமாகியமை கல்முனை வலய தமிழ் மொழித் தினத்தின் சிறப்பம்சமாகும்.

சமய அனுஷ்டானங்களில் கிராஆத் மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை மாணவிகளாலும் தேவாரம் உவெஸ்லி உயர்தர மாணவியினாலும் கிறிஸ்தவ சிந்தனை கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரி மாணவிகளாலும் முன்வைக்கப்பட்டன.

தமிழ்மொழித் தினப் போட்டிகளில் இம்முறை இணைக்கப்பட்ட நவீன நாட்டுக்கூத்து காரைதீவுக் கோட்டப் பாடசாலையினால் அரங்கேற்றப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

எழுத்தாக்கப் போட்டிகள் ஜுலை 20 ஆம் திகதி கல்முனை பற்றிமா கல்லூரியிலும் எழுத்தாக்கப் போட்டிகளுக்கான மதிப்பீட்டுப் பணிகள் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றன.

எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அரங்கப் போட்டிகளுக்கான ஆரம்ப நிகழ்வில் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. அதே வேளை அரங்கப் போட்டிகளில் வெற்றீட்டிய மாணவர்களுக்கு போட்டி முடிந்ததும் அவ்வரங்கத்தில் வைத்தே சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வாறான நடைமுறை இதுவே முதற் தடவையாகும்





இனமதங்களைக் கடந்து தமிழை நேசிக்கும் எல்லோருக்குமான விழா நம் எல்லோரையும் மொழியால் இணைத்திருக்கிறது. போட்டிகளில் பங்கு கொள்கின்ற மாணவர்கள் எல்லோரும் திறமையானவர்கள். வெற்றி பெற வேண்டுமென்ற அவாவில் வந்துள்ளனர். இவர்களின் கனவை செம்மைப்படுத்தி சரியானவர்களைத் தெரிவு செய்யும் மிகப் பெரிய கைங்கரியம் நடுவர்களின் கைகளில் தங்கியுள்ளது என நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் கோடிட்டுக் காட்டினார்.

திருக்கோவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை ஆகிய கல்வி வலயங்களை உள்ளடக்கிய கல்முனை கல்வி மாவட்டத்திற்கான மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் 07.08.2023 அன்று அட்டாளைச்சேனை முனீரா பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சிறப்பாக நடந்தேறின. மாவட்ட மட்ட அரங்கப் போட்டிகளும் அதற்கான ஆரம்ப நிகழ்வுகளும் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழன் சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளன. தமிழ்மொழித் தினத்திற்கான பண்பாட்டியல் அம்சங்களுடன் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

1947 ஆம் ஆண்டு ஜுலை 19 ஆம் திகதி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் இறைபதமடைந்தார். ஈழத்து மக்களுக்கு ஆற்றிய பணிக்காக இலங்கை அரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரை அங்கீகரித்ததுடன் இவரது மறைந்த நாளையே பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை தமிழ் மொழித் தினமாக அனுஷ்டித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
*(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)*

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியை சனூனா ஹரீட் ஆற்றிய சேவைகளுக்கு பாராட்டு

மூன்று தசாப்த காலமாக ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வு பெற்ற எஸ்.ஜெ.டீ. சனூனா ஹரீட்டுக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) சேர் ராசிக் பரீத் கேட்போர் கூடத்தில் கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன் தலைமையில் இடம்பெற்றது.

சிரேஷ்ட ஆசிரியை எஸ்.ஜெ.டீ. சனூனா ஹரீட் தனது ஆசிரியர் சேவையினை 1993 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் சுமார் 28 ஆண்டுகள் சேவையாற்றியதுடன் 02 ஆண்டுகள் சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் சேவையினை மேற்கொண்டுள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியினை 03ம் தரத்திலிருந்து உயர் தரம் வரை இக்கல்லூரியில் கற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் இளமாணி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து தனது முதலாவது நியமனத்தை இக்கல்லூரியின் உயர்தர பிரிவுக்கான வணிகக் கல்வி ஆசிரியராக பொறுப்பேற்றார்.

சமூகக்கல்வி பாட ஆசிரியையாக பணியாற்றியதுடன் தேசிய கீதம், கல்லூரி கீதம், வரவேற்பு கீதம், கலை இலக்கியம், பாடல்கள் குழு, இசைக் குழு, இணைப்பாடவிதான செயற்பாடுகள், விளையாட்டு, இல்லக்குழு தலைவி போன்ற செயற்பாடுகளிலும் கல்லூரியின் வளர்ச்சி, அபிவிருத்தியில் முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். நடப்பு ஆண்டுக்கான (2023) இல்ல விளையாட்டு போட்டியில் சம்பியன் வெற்றி பெற்ற இல்ல பொறுப்பாசிரியராக இவரே செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் சங்க தலைவர் அலியார் றிபான் (ஆசிரியர்) நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர்.அவரது மூன்று தசாப்த சேவையினை பாராட்டி கல்லூரி சார்பான நினைவு பரிசினை கல்லூரியின் முதல்வர் யூ.எல்.எம். அமீன் வழங்கி வைத்தார். தரம் 06 தொடக்கம் 13 வரையான பகுதித்தலைவர்கள் அதனுடன் தொடர்பான ஆசிரியர்கள் நினைவு பரிசில்கள் வழங்கினர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச். நதீரா, எம்.எஸ். மனுனா, என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# பணம் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்கான தேசிய கொள்கை

2006ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்பட்டுள்ள, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களமாக இயங்குகின்ற நிதிசார் உளவறிதல் பிரிவால் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும். பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்புக்களை தடுப்பதற்காக சர்வதேச தரக்கட்டளைகளை தயாரிக்கின்ற சர்வதேச அரசாங்கங்களுக்கிடையிலான நிதிச்செயலாற்றுகை செயலணி, அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கமைய இலங்கை, நிதிச்செயலாற்றுகை செயலணியின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்படுகின்றதா என்பதை நிதிச்செயலாற்றுகை செயலணியின் பிராந்திய நிறுவனமான பணம் தூய்தாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் வலயக் குழுவால் மதிப்பிடப்படும். குறித்த குழுவால் மேற்கொள்ளப்படும் பரஸ்பர மதிப்பீடு 2025 மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்காக மிகச்சிறந்த முறையில் இலங்கையின் நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 2023 – 2028 பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்கான இலங்கையின் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களைத் தடுத்தல் பற்றி அடையாளங் காணப்பட்டுள்ள பல வீனங்களுக்கு தீர்வுகளாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் உள்ளடங்கியதான செயற்பாட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ உவர்நீர் இறால் வளர்ப்புக்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான காணியொன்றை இரண்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கல்**

இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான வர்த்தக ரீதியான நீர்வாழ் உயிரின வளர்ப்பான உவர்நீர் இறால் வளர்ப்பு மூலம் 2021 ஆம் ஆண்டில் 14,414 மெற்றிக்தொன் உற்பத்திகள் பெறப்பட்டுள்ளதுடன், அதனை 2025 ஆண்டளவில் 50,000 மெற்றிக்தொன்களாக அதிகரிப்பதற்கும், அதன்மூலம் 65,500 மில்லியன் ரூபாய்கள் வெளிநாட்டு செலாவணியாக ஈட்டுவதற்கும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

எனினும், நீர்வாழ் உயிரின வளர்ப்புக்களுக்கு எமது நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட காணிகள் காணப்படுவதால் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்களை மேலும் விரிவாக்கம் செய்வதில் சவால்கள் உள்ளன. இச்சவாலுக்கு முகங்கொடுப்பதற்காக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியில் உயரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தல் போன்ற பல படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 218 ஏக்கர் மற்றும் 30 பேர்ச்சர்ஸ் காணி குறுகியகால வளர்ப்பு வட்டத்தில் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய 'வனமி' வகை இறால் வளர்ப்பு பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. இக்காணியை, அரச பெறுகைச் செயன்முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள டப்ளிவ்.எஸ்.ஆர். லோவ் அன்ட கே.எம்.என்.அக்டா சர்விஸ் (தனியார்) கம்பனி, மற்றும் நேன்போ ஃபூட்ஸ் (தனியார்) கம்பனிக்கு 109 ஏக்கர் 15 பேர்ச்சர்ஸ் வீதம் அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 30 வருட நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ கொள்கலன் செயற்படுத்துநர்களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்**

அமைச்சரவை முடிவுகள்




1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க 'கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பல் சரக்கனுப்புநர்களுக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநருக்கு உரிமமளித்தல் சட்டம்' பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 'கொள்கலன் சாலைகளில் செயற்படுத்துநர்களை 'சேவை வழங்குநராக' கருதி ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, செயற்படுதல், நவீன வர்த்தகம், கப்பலேற்றுதல் மற்றும் வழங்கல் சேவைகளின் தேவைகள் தொடர்பாக கொள்கலன் சாலை செயற்படுத்துநர்களின் அபிவிருத்தி மற்றும் அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மீது ஆரோக்கியமற்ற வகையில் தாக்கங்கள் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால் கொள்கலன் சாலை செயற்படுத்துநர்களால் மேற்கொண்டு செல்லப்படும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம், கட்டணம் மற்றும் கட்டண வீதங்களைத் தீர்மானித்தல், கட்டணங்களை விதித்தல் மற்றும் சேகரித்தலுக்கான ஏற்பாடுகளுடன் கூடிய புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவும், அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

வான்வெளிச் சேவையை வழங்குவதற்கான சேவை வழங்குநர்கள் அதிகளவானோர் முன்வருவதற்கு இயலுமாகும் வகையில் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6(3) உ பிரிவை திருத்தம் செய்வதற்காக 2023.03.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமாஅதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

பீடைகொல்லி தொழிற்றுறையில் உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் முன்னுரிமைகள் மற்றும் அதிகரித்து வரும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அணுகுமுறைகளுக்கு ஏற்புடைய வகையில் 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவிரோத பீடைகொல்லிகளை சுற்றாடல் நேயம்மிக்க வகையில் அழிப்பதற்காக செலவாகின்ற அரச பணத்தை தவறாளர்களிடமிருந்து அறிவிடல், தவறாளர்களால் மீண்டும் மீண்டும் மேற்கொள்கின்ற சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகளைப் பலப்படுத்தல் உள்ளிட்ட, ஏனைய ஏற்பாடுகளுடன் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் போது அடைந்த வெற்றிகள் மற்றும் தொலைநோக்கு**

ஜனாதிபதி, 2022 ஆம் ஆண்டு மே மாதம் பிரதமர் மற்றும் நிதி அமைச்சராக நியமிக்கப்படும் போது நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும், 2022.07.20 ஆம் திகதி ஜனாதிபதி பதவியில் கடமைகளை ஆரம்பித்த பின்னர், புதிய அமைச்சரவையுடன் இணைந்து குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக, அரச நிதிக் கொள்கை, நாணயக் கொள்கை, மின்சக்தி துறை, கடன் மீள்கட்டமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதியிடல் போன்ற துறைகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது. அத்துடன், பொருளாதாரத்தை மீள்நிலைக்குக் கொண்டு வந்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தொடர்ந்து வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மறுசீரமைப்புக்களுக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**★ ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகையின் அடிப்படையிலான நன்மைகளுக்கான வட்டிவீதத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் சொந்தமான திறைசேரி பிணைமுறிகளை மீள்கட்டமைப்பதால் குறித்த நிதியத்தின் அங்கத்தவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில், அதன் கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கடந்த ஐந்து வருட (05) காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள வருடாந்த வட்டிவீத நன்மைகளைக் கருத்தில் கொண்டு, 2023-2026 வரை தொடர்ந்து வரும் நான்கு (04) வருடங்களுக்கு பங்களிப்புத் தொகை அடிப்படையில் உரித்தான வட்டிவீதத்தை குறைந்தபட்சம் 9% வீதமாக அமைய வேண்டுமென நிர்ணயிப்பதற்கு இயலுமாகும் வகையில், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**★ கமத்தொழிலுக்காக சமனலவாவி நீர்த்தேக்கத்தின் நீரை வழங்கல்**

உடவளவை நீர்த்தேக்கத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் செய்கைகளுக்குப் போதுமானளவு நீர் இல்லாமையால், சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீரை விநியோகிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவு தொடர்பாக கடைப்பிடிக்கக் கூடிய மாற்று வழிமுறைகள் பற்றி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்களால் அமைச்சரவையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மாற்று வழிமுறைகள் தொடர்பாக ஆழமாகக் கலந்துரையாடிய பின்னர், தற்போது சமனலவெவ நீர்த்தேக்கத்தில் எஞ்சியுள்ள நீரில் இயலுமான அளவு விவசாய நடவடிக்கைகளுக்காக விநியோகிப்பதற்கும், அதனால் மின்னுற்பத்தியில் மேலெழும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, தேவையான மின்சாரத்தை தனியார் துறையிடம் கொள்வனவு செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கையின் போக்குவரத்து துறையில் இந்திய முதலீட்டாளர்கள்



இலங்கையின் போக்குவரத்து துறையில் முதலீடு செய்ய இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.



இலங்கைக்கான வர்த்தக பயணமொன்றின் போது, இந்தியாவின் ஜார்க்கண்ட் வர்த்தக மற்றும் கை த்தொழில் சம்மேளனத்தின் (Federation of Jjarkhand Chamber of commerce and Industries) பிரதிநிதிகள் , போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுடன் விசேட கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு வளாகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கை மற்றும் ஜார்கண்ட் இடையே காணப்படும் வர்த்தகம் மற்றும் தொழிற்துறையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது குலாநிதி பந்துல குணவர்தனவினால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சால் மேற்கொள்ளப்படும் புதிய முதலீட்டு யோசனைகள் குறித்து இந்திய பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.குறிப்பாக ரயில்வே துறைக்கு சொந்தமான நிலங்களில் முதலீட்டு வாய்ப்புகளுக்காக இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களை இணைந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்தார் .





மேலும், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் மின்மயமாக்கலுக்காக இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முதலீட்டு கருத்துருக்களின் அனுபவங்களை இரு தரப்பும் பரிமாறிக் கொண்டனர்.

ஜார்கண்ட் வர்த்தக மற்றும் தொழில்துறை சபையின் தலைவர் கிஷோர் மன்திரி உள்ளிட்ட அங்கு போக்குவரத்து துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்முனைவோர் உள்ளிட்ட சுமார் 25 பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தமிழ் மொழித்தின மாத்தறை மாவட்ட

# பாடசாலைகளுக்கிடையிலான போட்டி இன்று தாருல் உலூமில்

வெலிகம தினகரன் நிருபர்

அகில இலங்கை தமிழ் மொழித்தின தென் மாகாண மாத்தறை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் இன்று 9ம் திகதி புதன்கிழமை மாத்தறை மாறை / தாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

மாத்தறை மற்றும் அகுரஸ்ஸ வலயம் என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ள இப் போட்டிகள் தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ் ஷெய்க் மஷாஹிர் (நளீமி) தலைமையில் இடம் பெறவுள்ளது.

எழுத்தாக்கப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகளான பேச்சு, வாசிப்பு, இசை (தனி), இசை (குழு), நடனம், பாவோதல், வில்லுப் பாட்டு போன்றன இடம் பெறவுள்ளன.

இரு வலயங்களிலிருந்தும் சுமார் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். வெற்றியீட்டும் போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெறுவர் என போட்டி நிகழ்ச்சிகளின் செயலாளர் அஷ்ஷெய்க் எம். எம்.எம் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

இன்றைய தினம் தமிழ் மொழித்தின போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. இதில் காலி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் பாறூக் கலந்து கொள்ளவுள்ளார்.



பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் விஷேட கூட்டம் அண்மையில் பேருவளை மருதானையில் நடைபெற்றது. தலைவர் நிஸாம் ஹாஜியார் தலைமையில் பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அப்ரார் கல்வி நிலையஸ்தாபகரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், முன்னாள் தலைவர் ஏ.டப்ளியு.எம் அஜ்வாத் ஜே.பி, செயலாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி) உட்பட உறுப்பினர்கள் பலரும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60 வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வியைத் தொடர புலமைப்பரிசில் இவ்வமைப்பூடாக இம்முறையும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ரயீஸுல் முகத்தம் அல் – ஹாஸ் முஹம்மத் கஸ்வானி காலமானார்



பேருவளை விசேட நிருபர்

ஷாதுலிய்யாத் தரீக்காவின் மூத்த இஹ்வான்களில் ஒருவரும் மாத்தறை சாதுலிய்யா ஸாவியாவின் பிரதம தர்மகர்த்தாவுமான ரயீஸுல் முகத்தம் அல் ஹாஸ் முஹம்மத் கஸ்வானி காலமானார்.

மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா கலாபீடத்தின் முன்னேற்றத்திற்கும் ஷாதுலிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்கும் இவர் செய்த தியாகமிகு சேவைகளை என்றும் மறக்க முடியாது என கலீபதுல் குலபா மௌலவி எம். இஸட்.முஹம்மத் ஸுஹூர் (பாரி) விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புனித மக்கா பைத்துல் பாஸி தலைமையகத்தினால் அண்மையில் இவர் ரயீஸுல் முகத்தமாக நியமிக்கப்பட்டார். அன்னாரின் ஜனாஸா நேற்று (08) இரவு மாத்தறை கடை வீதி மீரா ஜூம்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. உலமாக்கள் கலீபாக்கள் பெருமளவிலான இஹ்வான்கள் ஜனாஸாவில் பங்குபற்றினர்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

NC CAW-7044 RENAULT KWID CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049193

WP CAQ-0134 TATA NANO CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049199

WP CAS-7254 DATSUN REDI GO CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049200

WP HO-7373 PROTON WIRA CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049201

### 110 மாருதி கார்கள் விற்பனைக்கு

SG KD-8654 MARUTI SUZUKI CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049196

WP KY - 5027 MARUTI SUZUKI ALTO CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049210

### 112 மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

18-3882 MAZDA FAMILIA CAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049186

### 117 வேன்கள் விற்பனைக்கு

56 -3097 ISUZU FARGO VAN. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049190

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

CP LG-8241 TOYOTA HILUX VIGO SINGLE CAB. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049191

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP LK -5820 LANKA ASHOK LEYLAND 1613 TIPPER. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049192

NC DAE-8997 TATA SUPER ACE TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049204

NP LK-6793 TATA 1615 DUMP TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049205

NW LJ-2807 FOTON TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049195

SP DAB-7586 MAHINDRA MAXXIMO TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049207

UP ZA -4484 TCB 3CX BACK HOE LOADAR. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049198

WP DAE-5423 TATA ACE HT2 TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049208

WP DAG-3385 NISSAN VANETTE TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049209

WP LL-0447 EICHER F/ B TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பி எல்சி, கண்டி. 0 7 7 010 7270, 0 7 7 478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049202

WP PT-5041 TATA SU P ERACE F/ B TR U CK. அதியு யர் வி லைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049203

42-7818 ISUZU FORWARD BOOM TRUCK. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049189

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG QX-3384 MAHINDRA ALFA THREE WHEEL. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049197

SP ABI -1865 PIAGGIO APE THREE WHEELER. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049206

WP - YU - 4870 BAJAJ THREE WHEELER. அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 049211

**தொலைபேசி :- 0112399568, 0112204545**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

# கேள்வி அழைப்பு (IFB)

| உருப்படி இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவில் கடவத்த முதல் கொடகம வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்களுக்காக தகைமையுள்ள தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்<br>(கடுவளை மற்றும் உடுகாவ அலுவலகத்திற்கு)<br>RDA/EOM&M/ELE/MNT/STDP&OCH/2023/17 |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 ஓகஸ்ட் 09 முதல் 2023 ஓகஸ்ட் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர், அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின்
பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கல்வி அமைச்சு

### மேசைக் கணனிகள் மற்றும் மடிக்கணனிகளின் பெறுகை (வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்)

### Contract No.: ED/07/101/10/2023/CF/G-02

1. நாடு முழுவதுமாக அமைந்துள்ள நிலையங்களுக்காக கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் விதித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மேசைக் கணனிகள் மற்றும் மடிக்கணனிகளின் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 12 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் மொத்த பொதிக்காக விலைமனுக்கோரல்களை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | அம்சத்தின் விளக்கம் | அம்சங்களின் எண்ணிக்கை | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| 1. | Desktop Computers with Office Package and Virus Guard | 11 | 555,000.00 |
| 2. | 650VA Line Interactive power supply (UPS) | 11 | |
| 3. | Laptops i5 with Office Package and Virus Guard | 49 | |
| 4. | Laptops i7 with Office Package and Virus Guard | 28 | |

விலைமனுதாரர் விலைமனுவுடன் விலைமனுப்பிணைகளை வழங்கல் வேண்டும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி அமைச்சின் 'இசுறுபாய', 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141-50 நீடிப்பு 1530) 2023 ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2023 ஓகஸ்ட். 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
5. 2023 ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெறுகைக் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
6. 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி,பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஆகியன அடக்கப்பட்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement of Desktop Computers & Laptops", ED/07/101/10/2023/CF/G-02** என்ற IFB இலக்கமானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு, ''இசுருபாய", பத்தரமுல்ல.**

# கேள்வி அறிவித்தல்

## கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

## 02 லோடர் வாகனங்களை மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

### LMSL/SUP/DPC/12/2023

கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் முழுமையான அரச நிறுவனமான இலங்கை கனிப் பொருள் மணல் லிமிட்டெட் இன் புல்மூட்டை இயந்திரசாலையின் கனிப்பொருள் மணல் உற்பத்திக்கு மணல் வெட்டுதல், சேர்த்தல், போக்குவரத்து மற்றும் ஏற்றுவதற்காக தகைமையுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து 02 லோடர் வாகனங்களை வாடகைக்கு பெறுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/3இல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் இன் வழங்கல்கள் முகாமையாளரிடம் அல்லது புல்மூட்டை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் இன் வழங்கல்கள் முகாமையாளரிடம் அல்லது புல்மூட்டை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் இயந்திரசாலை பிரதிப் பொது முகாமையாளர் (இயந்திரசாலை/ செயற்பாடுகள்) இடம் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் 2023.08.09 முதல் 2023.08.29 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தேவைப்படும் லோடர் வாகனங்களின் எண்ணிக்கை | விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி (ரூபா) |
|---|---|---|
| 02 | லோடர் வாகனங்களை மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 500,000.00 (ஒரு லோடருக்கும் மாத்திரம் எனின் ரூ. 250,000.00 |

2. மீளளிக்கப்படாத ரூ. 5000/= ஐ காசாக செலுத்திய பின்னர் குறித்த கேள்வி ஆவணங்களை 2023.08.09 முதல் 2023.08.29 பி.ப. 2.30 வரை மேற்படி அட்டவணையில் அமைந்துள்ள அலுவலகத்தில் அல்லது புல்மூட்டை இயந்திரசாலையின் வழங்கல்கள் பிரிவில் கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2023.08.18 மு.ப. 10.00 இற்கு இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் இன் இயந்திரசாலையில் நடைபெறுவதுடன், அதற்காக உத்தேச வழங்குநர்கள் சமுகமளித்தல் வேண்டும்.
4. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.08.31ம் திகதி 14.30 மணிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது அம்முகவரியில் உள்ள வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ்வேளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும்.
5. குறித்த ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கேள்வி ஆவங்களில் குறிப்பிடப்படும். மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படின் கீழேயுள்ள தொ.பே. இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**வழங்கல்கள் முகாமையாளர் - தலைமையகம் - 011-2883972 (நேரடி) 011-2883951/2**
**பிரதிப் பொது முகாமையாளர் (இ/செ)- புல்மூட்டை இயந்திரசாலை - 026-2256131, 026-2256132**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு (DPC),**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**இல. 341/13, சரண மாவத்த, ராஜகிரிய.**


**Repeat Your Ad For Better Offers**


## பிழை திருத்தம்
### பெறுகை அறிவித்தல்
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

### கிழக்கு மாகாணம் - நாய்களை மலடாக்கல் நிகழ்ச்சித்திட்டப் பெறுகை - 2023

மேற்படி தலைப்பில் கடந்த 2023 ஓகஸ்ட் 4ஆம் திகதியன்று தினகரன் நாளிதழின் 14ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் அட்டவணையில் நான்காவது நிரலின் மூன்றாவது வரியின் விலைமனுப்பிணைத் தொகையானது **40,000 ரூபாவென திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.**

ஏனைய விடயங்களில் மாற்றங்கள் எதுவுமில்லை.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுக அதிகார சபை

### கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள்

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01)**

1. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் **கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01)** எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு BMS வசதிகள் சகிதம் பொறிமுறை காற்றோட்டம் மற்றும் வளிச்சீராக்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.
   நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - **கட்டிட நிர்மாணத்துறையின் மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சேவைகளில்** விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது) EM1 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 10 வருடங்களில் 120 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ். இதை இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - கடந்த 10 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 480 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்த்து ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதிகள் 170 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023-08-11ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023-08-03ஆம் திகதி முதல் 2023-08-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து **''கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (HVAC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/01)"** எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 1,700,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறிகள் 2024-02-02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 90 நாட்களாகும்.
11. 2023-09-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம்தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக்கொள்ளலாம்.

மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

## சூழல் அமைச்சு

### சூழல் புத்தாக்குநர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கான சிறந்த சந்தர்ப்பமொன்று

2023 ஒக்டோபர் 3 ஆம் திகதியிலிருந்து 5 ஆம் திகதியன்று வரையும் கொழும்பு சங்கிரி-லாவில் ஆசிய பசுபிக்கிலுள்ள அமைச்சர்கள் மற்றும் சூழல் அதிகாரிகளின் 5 ஆம் மாநாட்டை இலங்கை நடத்தவுள்ளது. இந்த மாநாட்டில் 41 நாடுகளைச் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றுவர். இந்த மாநாட்டிற்கு நிகராக உள்ளூர் சூழலுக்கிசைவான தொழில்முனைவோர்களுக்கு அவர்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளை சர்வதேச மட்டத்தில் ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்காக அதே இடத்தில் சூழல் பொருட்காட்சியொன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பொருட்காட்சியில் இணைவதற்காக ஆர்வமுள்ள உள்ளூர் தொழில்முனைவோர்களிடமிருந்து ஆர்வ வேண்டுகோள்கள் அழைக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட இடவசதி காரணமாக சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் ஆகுசெலவை நிரப்புவதற்காக சில கட்டணங்கள் அறவிடப்படும். உங்கள் இடப்பரப்பை 2023 ஓகஸ்ட் 21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக தயவு செய்து ஒதுக்கிக் கொள்ளுங்கள். மேலதிக தகவலுக்காக 0779328032 (அசங்க) அல்லது 0702771093 (ஹிமாலி) அல்லது 0718154954 (ஹேமமாலி) ஆகியோருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**சூழல் அமைச்சு.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுக அதிகார சபை

### கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - மின்னியல் (PRECISION AC) வேலைகள்

**(ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/02)**

1. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் **கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - மின்னியல் (PRECISION AC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/02**) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உத்தேச நான்கு மாடி ECT கட்டிடத்திற்கு கட்டிட முகாமைத்துவ சேவைகள் (BMS) வசதிகள் சகிதம் சேமிப்பக அறைக்கு துல்லியமான வகையான (**PRECISION TYPE)** வளிச்சீராக்கிகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது.
   நிர்மாணக் காலம் 60 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - **கட்டிட நிர்மாணத்துறையின் மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சேவைகளில்** விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது) EM1/EM2 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - கடந்த 10 வருடங்களில் 35 மில்லியன் ரூபா அதற்கு மேற்பட்ட பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் மற்றும் இதனையொத்த மற்றும் சிக்கலான குறைந்தபட்சம் இரண்டு ஒப்பந்தங்களின் நிர்மாண அனுபவம்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்திருத்தல் வேண்டும். இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - கடந்த 10 வருடங்களில் சராசரி வருடாந்த நிர்மாண வேலையின் அளவு குறைந்தபட்சம் 180 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் தவிர்த்து ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் தேறிய திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதிகள் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023-08-11ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 25,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) 2023-08-03ஆம் திகதி முதல் 2023-08-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்களை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக்குறி பொறித்து **''கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - மின்னியல் (PRECISION AC) வேலைகள் (ஒப்பந்த இலக்கம் SLPA/EE/EW/ECT/AC/02)"** எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் 500,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறிகள் 2024-02-01ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 60 நாட்களாகும்.
11. 2023-09-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு, (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பிரதான பொறியியலாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
12. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) பெற்றுக்கொள்ளலாம்.

மேலுள்ள அனைத்தும் https://www.slpa.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067    E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# பிளைங் ஹோர்ஸ் சம்பியன்




**கல்முனை மத்திய தினகரன், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்**

கல்குடா டோன் டச் விளையாட்டுக் கழகம் நடத்திய ஈஸ்டன் டி10 பிளாஸ்ட் கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாட்டு கழகத்தை வீழ்த்தி சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்ற இந்தப் போட்டியில் 32 அணிகள் பங்கேற்றன. இதின் இறுதிப் போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட 113 ஓட்ட வெற்றி இலக்கை பிளைங் ஹோர்ஸ் அணி 5 விக்கெட்டுகளை இழந்து பெற்றது.

இந்தப் போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய முஹம்மட் றிபான் 26 பந்துகளில் 66 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றதோடு தொடர் நாயகன் விருது எஸ்.எம். சுஜானுக்கு கிடைத்தது.

# எல்.பி.எல் நடத்தை விதிகளை மீறிய 4 வீரர்களுக்கு அபராதம்




லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) நடத்தை விதியை மீறியதற்காக குசல் மெண்டிஸ் மற்றும் சாமிக்க கருணாரத்ன உட்பட நான்கு வீரர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி போட்டியின்போது மெண்டிஸ் மற்றும் கருணாரத்ன இடையில் மைதானத்தில் மோதல் ஏற்பட்டது தொடர்பிலான வீடியோ சமூக ஊடகத்தில் பரவிய நிலையில் அந்த சம்பவம் போட்டி அதிகாரிகளின் அவதானத்தை பெற்றது.

இந்நிலையில் தம்புள்ளை அணித் தலைவர் மெண்டிஸுக்கு போட்டிக் கட்டணத்தில் 10 வீத அபராதம் விதிக்கப்பட்டிருப்பதோடு ஒரு தகுதியிழப்புப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் அதிக கோபத்தை வெளிப்படுத்தியவராக கருணாரத்ன காணப்பட்டார்.

அவருக்கு போட்டிக் கட்டணத்தில் 30 வீத அபராதமும் தகுதியிழப்பு புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது. எல்.பி.எல் நடத்தை விதியின் 2.6 உட்பிரிவின் கீழ் இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டிருப்பதோடு நடத்தை விதி 2.21 உட்பிரிவின் கீழ் மேலதிகமாக 25 வீத அபராதமும் ஒரு தகுதி இழப்புப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

மெண்டிஸின் அணியைச் சேர்ந்த சக வீரர் ஹசன் அலிக்கும் போட்டிக் கட்டணத்தில் 15 வீத அபராதத்துடன் ஒரு தகுதியிழப்புப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

பிறிதொரு சம்பவத்தில், கொலம்போ ஸ்ட்ரைக்கஸ் அணிக்காக ஆடும் பாகிஸ்தானின் நசீம் ஷாவுக்கு போட்டிக் கட்டணத்தில் 20 வீதம் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதோடு ஒரு தகுதியிழப்புப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது. எல்.பி.எல் நடத்தை விதி 2.5 உட்பிரிவின் கீழ் இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நஸீம் சாஹ் ஜப்னா கிங்ஸ் அணி வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் ஆட்டமிழந்தபோது நடந்து கொண்ட விதத்திற்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வீரர்கள் கண்டிக்கப்பட்டிருக்கும் நடத்தை விதியின் உட்பிரிவுகளின் சரியான தன்மையை குறிப்பிடாதபோதும் இது வீரர்கள் போட்டிக்கு அவப்பெயரை கொண்டுவந்ததுடன் தொடர்புடையவை என்று எல்.பி.எல் தொடரின் பணிப்பாளர் சமந்த தொடன்வெல உறுதிசெய்துள்ளார்.

இதில் கடந்த ஜூலை 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஜப்னா கிங்ஸ் மற்றும் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியின்போது இடம்பெற்ற சம்பவத்திற்காகவே நசீம் ஷாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு வீரர்களும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

# சம்பியனானது றஹீமிய்யா

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகம் ஏற்பாட்டில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

32 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்ட இந்த போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் (07) கழகத்தின் தலைவர் ஐ.எல். பாயில் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாலமுனை அறபா விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் முடிவில் 49 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றஹீமியா அணி 4.1 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.



# பாக். தேர்வுக்குழு தலைவராக மீண்டும் இன்ஸமாம் நியமனம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு தலைவராக அவ்வணியின் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக் 2ஆவது முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு தலைவராக பணியாற்றிய ஹாரூன் ரஷித் கடந்த மாதம் அந்தப் பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து அந்தப் பதவிக்கு பாகிஸ்தான் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக்கின் பெயர் பரிசீலிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், மிஸ்பா உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவானது புதிய தேசிய தேர்வுக் குழுவை அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தியது.

இதில் முன்னாள் தலைவரும், முன்னாள் தேர்வுக் குழுவின் தலைவருமான இன்சமாம் உல் ஹக்கை மீண்டும் தலைமை தேர்வாளராக நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது. 53 வயதான இன்சமாம் இதற்கு முன் கடந்த 2016 முதல் 2019 வரையில் பாகிஸ்தான் அணியின் தலைமைத் தேர்வாளராக பணியாற்றி இருந்தார்.

பாகிஸ்தான் அணி, எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 30ஆம் திகதி ஆரம்பமாகும் ஆசியக் கிண்ண கிரிக்கெட்டிலும் பங்கேற்கிறது. இவ்விரு தொடர்களுக்குமான பாகிஸ்தான் அணியை இன்சமாம் உல் ஹக் தலைமையிலான தேர்வு குழு தெரிவு செய்து அறிவிக்க உள்ளது.

# பூமியின் மிக வெப்பமான மாதமாக ஜூலை பதிவு



பூமியில் இதுவரை பதிவான மிக வெப்பமான மாதமாக கடந்த ஜூலை மாதம் பாதிவானது என்பதை ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை கண்காணிப்பகம் உறுதி செய்துள்ளது.

கடந்த 2019 ஜூலையில் சராசரி வெப்பநிலை 16.63 பாகை செல்சியஸாக பதிவானதே சாதனையாக இருந்த நிலையில் கடந்த மாதம் இதனை விட 0.33 பாகை செல்சியஸ் அதிக வெப்பம் பதிவானதாக அது குறிப்பிட்டுள்ளது.

# 12 ஆண்டுகளாக மனைவியை சிறைப்பிடித்த கணவர் கைது



12 ஆண்டுகளாகச் சொந்த வீட்டில் தமது மனைவியைச் சிறைப்பிடித்து வைத்திருந்ததாக நம்பப்படும் 55 வயது ஜெர்மனிய ஆடவரை பிரான்ஸ் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அந்தப் பெண் நிர்வாணமாக, மிகவும் மோசமான நிலையில் மீட்கப்பட்டார்.

வீட்டின் படுக்கையறையிலிருந்து அவர் மீட்கப்பட்டுள்ளார். தலை மொட்டையடிக்கப்பட்டு உடலில் பல்வேறு காயங்களுடன் இருந்த அவர் துன்புறுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அவர் உடல்நலம் குன்றியிருப்பது மருத்துவப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஊடகங்கள் கூறியிருந்ததுபோன்று அந்தப் பெண்ணின் உடலில் எலும்பு முறிவுகளோ காயங்களோ இல்லை. அவருக்கு நீர்ச்சத்துக் குறையவில்லை என்று ரத்தப் பரிசோதனையில் தெரியவந்தது.

53 வயதாகும் அந்தப் பெண் உதவி கேட்டுத் தொலைபேசி வழி பொலிஸாரை அழைத்ததை அடுத்து இச்சம்பவம் அம்பலமானது. அந்தப் பெண்ணைப் பார்த்தே 10 ஆண்டுகள் ஆவதாக அக்கம்பக்கத்தார் கூறியுள்ளனர்.

தமது மனைவிக்குப் புற்றுநோய் பாதிப்பு இருப்பதாகக் கணவர் மற்றவர்களிடம் கூறி வந்துள்ளார்.

# ஸூம் சேவை ஊழியர்களுக்கும் வேலைக்குத் திரும்ப அழைப்பு



ஸூம் சேவை கொரோனா தொற்று காலகட்டத்தின்போது பலரும் வீட்டிலிருந்து வேலை செய்ய உதவியாக இருந்தது. இப்போது அந்த ஸூம் நிறுவனத்தின் ஊழியர்களே மீண்டும் அலுவலகத்திற்கு திரும்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

வேலையிடத்திலிருந்து சுமார் 80 கிலோமீற்றர் தூரம் வரை வசிக்கும் ஊழியர்கள் வாரத்திற்கு இரு முறையாவது அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். அந்த நடைமுறையே மிக அதிக பலன் அளிக்கக்கூடியது என்று நிறுவனம் குறிப்பிட்டது.

புதிய மாற்றம் இம்மாதமும் (ஓகஸ்ட்) அடுத்த மாதமும் (செப்டம்பர்) நடைமுறைப்படுத்தப்படும் என்று பி.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது. அமசோன், டிஸ்னிலாண்ட் உட்பட பல பெரிய நிறுவனங்கள் ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யும் நாட்களைக் குறைத்துள்ளன.

## சர்வதேச செய்திகள்

### ஜெர்மனியில் 2ஆம் உலகப் போரின்

# வெடிகுண்டு கண்டுபிடிப்பு; 13,000 பேர் வெளியேற்றம்



மேற்கு ஜெர்மனியின் டுசெல்டார்ப் நகரிலிருந்து சுமார் 13,000 குடியிருப்பாளர்கள் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அங்கு 2ஆம் உலகப் போரின் போது கைவிடப்பட்டதாக நம்பப்படும் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தீயணைப்புத் துறை வீரர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஒரு தொன் எடையிலான அந்த வெடிகுண்டு இரவோடு இரவாகச் செயலிழக்கச் செய்யப்படும் என்று தீயணைப்புத் துறை கூறியது.

2ஆம் உலகப் போர் முடிந்து 78 ஆண்டுகள் ஆகும் நிலையில் ஜெர்மனியிலுள்ள பல நகரங்களில் கட்டுமானப் பகுதியிலிருந்து இன்னும் வெடிக்காத குண்டுகள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

2017ஆம் ஆண்டு பிராங்பர்ட்டில் 1.4 தொன் எடையில் வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டதை அடுத்துச் சுமார் 65,000 மக்கள் இடம்மாற்றப்பட்டனர்.

2021இல் மியூனிக் நிலையம் அருகேயுள்ள கட்டுமானப் பகுதியில் 2ஆம் உலகப் போரில் கைவிடப்பட்ட குண்டு வெடித்ததில் 4 பேர் காயமுற்றனர். ரயில் சேவைகள் தடைபட்டன.

# மற்றொரு இருமல் மருந்துக்கு சுகாதார அமைப்பு எச்சரிக்கை




உலக சுகாதார அமைப்பு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்து குறித்து எச்சரித்துள்ளது.

ஈரக்கில் விற்கப்பட்ட அந்த மருந்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக டைதிலீன் கிளைகோல் மற்றும் எத்திலீன் கிளைகோல் ஆகியவை இருந்தன. இரண்டுமே மனிதர்களுக்குக் கடும் பிரச்சினைகளை உருவாக்கக்கூடும்.

குறிப்பாகப் பிள்ளைகளுக்கு அவை மரணத்தைக்கூட விளைவிக்கலாம் என்று கூறப்பட்டது.

இருமல் மருந்தின் பாதுகாப்பு, தரம் குறித்து உற்பத்தி நிறுவனம் உத்தரவாதம் தரவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டது.

உலகளவில் விற்பனையான கலப்பட இருமல் மருந்துகள் குறித்து அண்மைய மாதங்களாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்து வருகிறது. கண்காணிக்கப்படும் மருந்துகளில் குறைந்தது 5 மருந்துகள், இந்திய நிறுவனங்கள் தயாரித்தவையாகும்.

கடந்த ஆண்டு காம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தானில் குறைந்தது 89 சிறுவர்களின் உயிரிழப்புடன் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்துகள் தொடர்புபட்டிருந்தன. இதனை அடுத்து இந்திய நிர்வாகம் மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உரிமத்தை ரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய பகுதியில் இருந்து கப்பலை அகற்ற பிலிப்பைன்ஸுக்கு சீனா அழுத்தம்




தென் சீனக் கடலின் சர்ச்சைக்குரிய தீவுப் பகுதியில் தரைதட்டியிருக்கும் போர்க்கப்பலை அப்புறப்படுத்தும்படி பிலிப்பைன்ஸை சீன வெளியுறவு அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அந்தப் பகுதியைக் கைவிட முடியாது என்று மணிலா சீனாவிடம் தெரிவித்ததை அடுத்து சீனா அவ்வாறு வலியுறுத்தியது.

'செகண்ட் தாமஸ் ஷோல்' எனும் பவளப்பாறைப் பகுதியில் இருந்து போர்க்கப்பலை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். முன்னர் இருந்ததைப்போலவே அந்தப் பகுதி ஆளில்லா வட்டாரம் என்ற நிலையில் தொடர வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சு கூறியது.

இது குறித்துப் பலமுறை இராஜதந்திர ரீதியாக மணிலாவிடம் பீஜிங் அதன் கருத்தைத் தெரிவித்திருப்பதாகவும் ஆனால் அதன் நல்லெண்ணம் அலட்சியப்படுத்தப்பட்டதாகவும் அமைச்சு குறிப்பிட்டது.

கடல்சார் விவகாரங்கள் குறித்த பேச்சுகளைக் கையாள சீனா விருப்பம் கொண்டுள்ளதாகவும் அது குறிப்பிட்டது. அந்தப் பவளப்பாறைப் பகுதியை 'அயுஜின் ஷோல்' என்று பிலிப்பைன்ஸ் குறிப்பிடுகிறது.

அங்கு தரைதட்டியிருக்கும் கப்பலைப் பழுதுபார்க்க உதவும் கட்டுமானப் பொருட்களை அனுப்ப வேண்டாம் என்று மணிலாவிடம் குறிப்பிட்டிருப்பதாக கடந்த திங்கட்கிழமை (07) சீனக் கடலோரக் காவல்படை கூறியது.

அந்த வட்டாரத்திற்கு சென்றுகொண்டிருந்த பிலிப்பைன்ஸ் கப்பலை சட்டரீதியாக தடுத்து நிறுத்தியதாக சீன வெளியுறவு அமைச்சு தகவல் வெளியிட்டது. பிலிப்பைன்ஸின் நடவடிக்கை சீனாவின் அரசுரிமையைப் பாதிப்பதாகவும் தென் சீனக் கடல் நடத்தை விதிமுறையை மீறுவதாகவும் அது கூறியது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 9ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023-08-09

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | பொலன்னறுவை நீர் வழங்கல் திட்டத்தில் HDPE குழாய் வழிகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: US/NC/DGM/LAY-HDPE/POL/2023/037 | 6,000/-+VAT ** | ரூபா 99,900/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.66 மில்லியன் | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 02 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல:RSC-C/CN/CIVIL/O&M/AMBANGAGA/2023/47 | 12,500/+ VAT ** | ரூபா 110,000/- | சிவில் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.7 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்டை, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 0812492311) | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 03 | வெள்ளவாய நீர் வழங்கல் திட்டத்தில் யாலபோவயில் குழாய்கள் பாலக் கடவையை (Pipes Bridge Crossing) நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல:<br>RSC(UVA)/DGM(UVA)/REH/YALABOWA/2023/06R | 12,500/+ VAT ** | ரூபா 248,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.5 மில்லியன் | பி.ஒ.நி. (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele : 0552230934<br>Fax : 0552230974/ 0552222448 | 17/08/2023 பி.ப. 2.00 மணி |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 04 | 100,000 எண்ணிக்கையான 15mm(1/2'') Magnetic Type Brass Lockable Ball Valves வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: DGM/M&E/Magnetic Type Brass Lockable Ball Valves/15/2022/05 | 35,000/-+VAT ** | ரூபா 2,842,000/- மற்றும் தேநீவவ சபைக்கு மாதிரிப் பரீட்சித்தல் கட்டணமாக ரூபா 151,567.50 செலுத்திய பற்றுச்சீட்டு | 15mm Magnetic Type Brass Lockable Ball Valves வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele : 011-2605328<br>Fax : 011-2635885 | 31/08/2023 மு.ப. 10.00 மணி |
| 05 | CKD தடுப்புத் திட்டத்திற்கு Antiscalat Chemical வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : CKD/NC/DGM/ANTISCAL/CKD/2023/056 | 2,000/-+VAT | ரூபா 27,000/- | Antiscalat Chemical வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | 02 மற்றும் 03ஆம் இலக்க பழைய உள்ளீர்ப்புப் பம்பிக்கு Hexagonal Coupling Kit வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : RPC/WP/G/AMB/M&E/O&M/2023/13 | 4,000/-+ VAT | ரூபா 37,600/- | Hexagonal Couplingkits வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 3.76 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், (மேற்கு – உற்பத்தி), தேநீவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele : 0112418532<br>Fax : 0112549199 | 29/08/2023 பி.ப. 2.00 மணி |
| | **M&E கேள்விகள்** | | | | | | |
| 07 | CKD தடுப்புத் திட்டத்திற்கான RO பொறித்தொகுதிகளுக்கு உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல:<br>CKD/NC/DGM/SUP/RO-SPARES/ CKD/2023/061 | 2,000/- +VAT | ரூபா 27,500/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 08 | அநுராதபுரம் - துருவில நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு VFD மற்றும் Alum Feeding பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RH/NC/DGM/M&E/TPT/EQUIP/2023/016 | 12,500/+ VAT ** | ரூபா 250,000/- | VFD மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் இரசாயன பம்பிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 09 | பெண்டிவெவ நீர் வழங்கல் திட்டம் - Borehole type Submersible வகையான நீர்ப் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : CKD/NC /POL/BEDI/PUMP/2023/002 | 4,000/-+ VAT | ரூபா 35,000/- | Chemical Dosing பம்பிகள் மற்றும் துணைப்பகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | மின்னேரிய நீர் வழங்கல் திட்டம் - Borehole type Submersible வகையான நீர்ப் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : CKD/NC /POL/MIN/PUMP/ 2023/003 | 4,000/-+ VAT | ரூபா 35,000/- | Chemical Dosing பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 11 | கம்பஹா பிராந்தியத்திலுள்ள நீர் வழங்கல் திட்டத்திலுள்ள குளோரினேட்டர் இல்லங்களுக்கு Chlorine Gas Leak Detectors வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/M&E/GAM(RH)/2023/19 | 4,000/-+ VAT | ரூபா 42,750/- | கேஸ் குளோரினேட்டர்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 2.85 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele : 0112922129<br>Fax : 0112922146 | 23/08/2023 மு.ப. 10.00 மணி |
| 12 | லபுகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள Progressive Cavity பம்பிகளுக்கு பம்பி உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : RPC/WP/G/LABU/M&E/O&M/2023/21 | 4,000/-+ VAT | ரூபா 40,000/- | பம்பி உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 2.62 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், (மேற்கு – உற்பத்தி), தேநீவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele : 0112418532<br>Fax : 0112549199 | 29/08/2023 பி.ப. 2.00 மணி |
| | 2023-07-26ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. பூகொட உள்ளீர்ப்பிற்கு உலர்ந்த மற்றும் ஈரப்பதன் Submersible பம்பித் தொகுதிகயை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: RSC(W/N)/M&E/ GAM(RH)/2023/13 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 13 | கந்தான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் எல்லகந்த நீர்த்தேக்கத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு சேவைக்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல : RPC/WP/S/KAN/CIVIL/O&M/2023/06 | 12,500/+ VAT ** | ரூபா 137,600/- | ஆவணத்தின் பிரகாரம் சகிதம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 13.76 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், (மேற்கு – உற்பத்தி), தேநீவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele : 0112418532<br>Fax : 0112549199<br>ஹொரண, கந்தனகம கந்தன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் 2023-08-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 29/08/2023 பி.ப. 2.00 மணி |
| 14 | யாழ்ப்பாண மாவட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : RSC/NDGM/O&M/UNSKILLED AND SKILLED WORKMEN/JAFFNA/2023/065 | 12,500/+ VAT ** | ரூபா 250,000/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பி.ஒ.நி. (வடக்கு) அலுவலகம், தேநீவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele : 024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax : 024-2225088/ 024-2227341<br>யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதி, தேநீவச பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் 2023-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 15 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்திய), நிர்மாணப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : O&M/RSC/NC/DGM/HV/CONS/2023/039 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஒ.நி. (வடமத்தி), தேநீவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele : 0252222296/ 0252235339<br>Fax : 0252225609 | 23/08/2023 பி.ப. 2.00 மணி |
| 16 | களனி பிராந்திய முகாமையாளருக்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/2023/41<br>. | 6,000/-+VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் சகிதம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை<br>Tele : 0112922129<br>Fax : 0112922146-2922146 | 23/08/2023 மு.ப. 10.00 மணி |
| 17 | களனி பிராந்தியத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/2023/50 | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele : 0112922129<br>Fax : 0112922146 | 23/08/2023 மு.ப. 10.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

**அதிகார சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான – பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரல் – 2023/2024**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான - பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து விலைமமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கி |
| PRDA/ WP/PRO/ 2023 /56 | மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான - பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல் | ரூ.1000.00 (வெட் வரியின்றி) | ரூ. 10,000.00 | ரூ.20,000.00 |

**கேள்வி விநியோகித்தல்**

இதற்கான கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூ.1000.00+ 15% வெட்+SSCL 2.5% படிவக் கட்டணத்தைச் செலுத்தி 2023.08.09 முதல் 2023.08.22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை இவ் அலுவலகத்தின் பெறுகைப் பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு காப்புறுதி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க முடிவது ஒரு கேள்விக்காக மட்டுமே.

**கேள்விகளை ஏற்றுக்கொள்ளல்/திறத்தல்**

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் உள்ள இடத்தின் இரண்டாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.08.23 மு.ப.11.00 இற்கு முன்பு இடலாம் அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம். (கடித உறையின் மேல் மூலையின் இடதுபக்கம் “இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை காப்புறுதி செய்தல்” என்று குறிப்பிடுல் (வேண்டும்)

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல.59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12.**
**தொ.பே.இலக்கம் - 011-4849825/45**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு மற்றும் நிர்மாண, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்

**60/70 தரத்தில் தார் மற்றும் CRS1 இமல்சன் வழங்குதல்**

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் எஸ்போல்ட் உற்பத்தி சாலை மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களின் தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | எஸ்போல்ட் உற்பத்தி சாலை மற்றும் நிறை வேற்று பொறியியல் அலுவலகம் | வழங்கல் அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூ. | |
|---|---|---|---|---|---|
